# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 08, சனிக்கிழமை 21.01.2017 | கதிர் 77



மீண்டும் புதுப் பொலிவுடன்
சாறிகளின் சாம்ராஜ்ஜியம்
**சரவணா ரெக்ஸ்**
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992




புனிதர் அன்னை தெரேஸா நினைவுக் கூட்டத்தில்...

# மதசார்பற்ற இலங்கை அதுவே எமது விருப்பம்!

## யாழ்ப்பாணத்தில் நேற்று சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 21

**எந்தவித பாகுபாட்டுக்கோ அல்லது சமத்துவமின்மைக்கோ உட்படுத்தப்படாமல் எல்லா மக்களும் தத்தமது மனவுணர்வுக்கு இயைந்த மதத்தையோ, நம்பிக்கையையோ பின்பற்றக் கூடியதான மதசார்பற்ற இலங்கை அமைவதையே நாம் விரும்புகின்றோம் என்று நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.**

அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் - அதில் பௌத்த மதத்துக்கு மேன்மையும் முக்கியத்துவமும் அளிக்கும் ஷரத்துகள் தொடர வேண்டும் என்று தென்னிலங்கையில் பலத்த குரல் எழுப்பப் படுகையில் – சம்பந்தனின் இந்த அறிவிப்பு முக்கிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

அதுவும் இந்திய, இலங்கைப் பிரமுகர்கள், யாழ். ஆயர் போன்ற

பக்கம் 19 >>>

## ஏறுதழுவுதல் தடை: கொழும்பிலும் போராட்டம்

கொழும்பு, ஜன.21

இந்தியாவில் ஏறுதழுவுதல் விளையாட்டுக்குதடை விதிக்கப்பட்டமையை ஆட்சேபித்து இன்று கொழும்பிலும் கவனவீர்ப்புப்போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு காலி முகத்திடலில் முற்பகல் 11 மணி முதல் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## குருநாகல் விபத்தில் 22 பேர் காயம்!

தம்புள்ளை – குருநாகல் பிரதான வீதியில் ஒமரகொல்ல பிரதேசத்தில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 3 பெண்களின்நிலைகவலைக்கிடமாக உள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் குருநாகல், கலவேல மற்றும் கொகரெல்ல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமைகள் இங்கு மேம்பாடு என ஐ.நா. ஆணையாளருக்கு மகிழ்ச்சியாம்!

கொழும்பு, ஜன.21

இலங்கையில் மனித உரிமை விவகாரங்களில் ஏற்பட்டுள்ள சாதகமான முன்னேற்றங்கள் தொடர்பில் தான் மகிழ்ச்சியடைகின்றார் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினார் என பிரதமர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பக்கம் 20 >>>

## ஏறுதழுவல் தடைக்கு எதிராக யாழில் இன்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜன.21

தமிழரின் பாரம்பரிய விளையாட்டான ஏறு தழுவுதலுக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி யாழ்பாணம் பொது நூலகம் முன்பாக இன்று காலை 8.30 மணிக்கு உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் இந்த உண்ணாவிரதம் இடம்பெறவுள்ளது.

இந்த ஆண்டு எப்படியாவது நமது பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை நடத்தியே தீரவேண்டும் என மத்திய,

பக்கம் 20 >>>

# முன்னாள் போராளிகள் கைதை நிறுத்துங்கள்!

## முதலமைச்சர் விக்கினேஸ்வரன் வலியுறுத்து

முன்னாள் போராளிகளைக் கைது செய்வதை இராணுவத்தினரும் பொலிஸாரும் நிறுத்த வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பதில் உயர்ஸ்தானிகர் போல் மற்றும் அவரது பிரதிநிதிகள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நேற்று கைதடியில் உள்ள முதலமைச்சர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து முதலமைச்சர் தெரிவிக்கையில் –

வடமாகாண மக்களுக்கு எவ்வாறான உதவிகளை வழங்க முடியுமென ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினர் என்னிடம் கேட்டனர்.

பக்கம் 20 >>>

## ரூ.1,000 கள்ள நோட்டுக்கள் வடமராட்சியில் தயாரிப்பு!

வடமராட்சி, ஜன.21

வடமராட்சிப் பகுதியில் போலி நாணயத்தாள்களை அச்சிட்ட வீடு ஒன்றை முற்றுகையிட்ட நெல்லியடிப் பொலிஸார் அங்கிருந்த சந்தேக நபர்கள்ஐவரைக்கைதுசெய்ததுடன் போலி நாணயத்தாள் அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டவை எனக் கருதப்படும் உபகரணங்களையும் கைப்பற்றினர்.

நேற்று மதியம் வல்வைப்

பக்கம் 20 >>>

## நுகேகொடை எதிர்ப்புக் கூட்டத்தின் வெற்றி குறித்து மஹிந்த நம்பிக்கை

கொழும்பு, ஜன.21

நுகேகொடையில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டம் கூட்டு எதிரணியால் ஏற்பாடுசெயப்படுவது. அதில் நான் வெறுமனே தலை காட்டிச்செல்பவன் அல்லன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு நேற்று விஜயம் செய்த

பக்கம் 20 >>>

அளப்பு அருணாசலம்



அப்ப... இங்கை அச்சுக்கலை உச்சத்திலை போலை...!

## இறக்குமதி செய்யப்படும் அரிசியை 76 ரூபாவுக்கு மேல் விற்கக்கூடாது

### ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, ஜன.21


இறக்குமதி செய்யப்படும் அரிசியை எக்காரணம் கொண்டும் ஒரு கிலோ 76 ரூபாவிற்கு மேல்விற்பனைசெய்யக்கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனியார் வர்த்தகர்கள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தாங்கள் விரும்பியபடி அரிசி விலையை அதிகரித்து

பக்கம் 20 >>>

# போகம்பர சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை பார்வையிட்டார் செல்வம் எம்.பி.

## சிவன் அறக்கட்டளை நிறுவுநரும் கூடச்சென்றார்



கண்டி தும்பறை போகம்பர சிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். அவருடன் சிவன் அறக்கட்டளையின் நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதமும் சென்றிருந்தார்.

மேற்படி சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 18 கைதிகளையும் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கண்டிபோன்றமாவட்டங்களைச் சேர்ந்த கைதிகளில் பலர், தாங்கள் எதுவித விசாரணைகளும் இன்றி பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர்.

மேலும் சிலர், 'எங்களை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகள் சிங்களவர்களாக உள்ளனர். இதனால், எங்களுக்கு நீதியான தீர்ப்பு கிடைப்பதில்லை. எனவே எங்களை தமிழ் நீதிபதிகள் விசாரணை செய்ய வேண்டும். அல்லது தமிழ் நீதிபதிகள் உள்ள நீதிமன்றங்களுக்கு எமது வழக்குகளை மாற்றவேண்டும்" - எனக் கேட்டுக்கொண்டனர். (ம)

# ஊடக தொழில்சார் ஒழுக்கக்கோவை தமிழ் மொழி அறிக்கை வெளியீடு

ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின்தொழில்சார் ஒழுக்கநெறிக்கோவை தொடர்பான தமிழ் மொழி அறிக்கை வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ரில்கோ விடுதியில் இடம்பெறவுள்ளது.

யாழ். ஊடக அமையம், யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்கள் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை நடத்தவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் பங்குபற்றுவர்.

வெளியிடப்படவுள்ளஅறிக்கையின் சிங்கள மொழி வடிவம் இலங்கை அரசிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம)

# உயர் நீதிமன்றால் அழைப்பாணை

'சிறிலங்கன் எயார்லைன்ஸ்' நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியை எதிர்வரும் மே 30 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உயர் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# பிரதியமைச்சர் சரத்குமார பிணையில் விடுதலை

கொழும்பு, ஜன.21

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதியமைச்சர் சரத்குமார குணரத்ன நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு களப்பு பகுதியில் அபிவிருத்தித் திட்டமொன்றுக்காக ஒதுக்கப்பட்ட 112 லட்சம் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பிரதியமைச்சர் சரத்குமார குணரத்ன கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்தவழக்கு நேற்று கொழும்பு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவரை 25ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 10 லட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஓ)

# ட்ரம்ப்பிற்கு எதிராக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்




அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப்பிற்கு எதிராக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய சோசலிசக் கட்சியால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக நேற்றுப் பகல் இடம்பெற்றது.

ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய, ஐக்கிய தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் லீனஸ் ஜயதிலக, ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தர்மசிறி லங்காபேலி உள்ளிட்ட பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு எதிரான கொள்கையுடைய ட்ரம்ப்பிற்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும், ட்ரம்ப்பிற்கு எதிராக இலங்கை மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துவதாக எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியவாறு இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஓ)

# வவுனியா வடக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி எல்லையில் முரண்பாடு

## மத்திய உள்ளூராட்சி அமைச்சருக்கு எடுத்துரைப்பு

வவுனியா, ஜன.21

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான உள்ளூராட்சி எல்லை நிர்ணயத்தில் நிலவும் குறைபாடு தொடர்பில் தமிழ்த் தேசிக்கூட்டமைப்பு, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் எடுத்துரைத்துள்ளது.


நேற்றுமுன்தினம் வவுனியா வடக்கு கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தொழில்நுட்ப ஆய்வுகூடத் திறப்புவிழாவுக்குச்சென்றபோதே இந்த விடயம் அவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும்நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் மற்றும் வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சரின்சார்பில்அவரதுபிரத்தியேக செயலாளர் சத்தியசீலன் ஆகியோர் அடங்கிய குழுவினரே இந்த விடயத்தை அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு எடுத்துரைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாக எல்லைக்குள் காணப்படும் சிங்களக் குடியேற்றக் கிராமங்களை உள்ளடக்கிய நான்கு வட்டாரங்கள் கடந்த அரசாங்கத்தினால் வவுனியா வடக்கு பிரதேசசபையுடன் இணைக்கப்பட்டிருந்தன.

இந்தச்செயற்பாட்டால் அந்தக் கிராம மக்கள் நிர்வாக ரீதியில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். தாங்கள் வவுனியா வடக்கு பிரதேச சபையில் இருந்து பிரிந்துசெல்ல வேண்டும்என்று அவர்கள் குரல் கொடுத்து வருகின்றனர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (100)

# ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வேண்டும்: வவுனியாவிலும் நேற்று கவனவீர்ப்பு




வவுனியா, ஜன.21

தமிழரின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கோரி தமிழகத்தில் நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு ஆதரவுதெரிவித்து, நேற்றுவவுனியா மத்திய பேருந்து நிலையத்திலும் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முகப்புத்தகத்தினூடாக விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று நேற்று மாலை 4 மணியளவில் வவுனியா பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஒன்றுதிரண்ட இளைஞர்கள் இந்தக் கவன வீர்ப்புபோராட்டத்தில்ஈடுபட்டனர்.

'மாட்டுஇனங்களைப்பாதுகாப்போம்', 'தடை அதை உடை', 'ஜல்லிக்கட்டு நம் இனத்தின் அடையாளம்', 'காப்போம் காப்போம் மாட் டைப் பாதுகாப்போம்', 'தமிழகத்திற்காக ஈழம்; ஈழத்திற்காக தமிழகம்' - போன்ற வாசகங்களுடன்கோஷங்களை எழுப்பியவாறுபெரும்எண்ணிக்கையான இளைஞர்கள் இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ம-100)

# சோபித தேரரின் காரை தேடுகின்றனர் பொலிஸார்

மறைந்த வண.மாதுலுவாவே சோபித தேரர் பயன்படுத்திய சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான சொகுசு கார் காணாமற்போனமை தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஏழு மாதங்களாக அந்த வாகனத்தைக் காணவில்லை என்று கோட்டை நாக விகாரையின் வண.உடதளகந்தே ஆரியரத்ன தேரர் உள்ளிட்ட குழுவினரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கார் காணாமற்போனமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து மிரிஹான பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஓ)

# மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டம்; 7 பல்கலை மாணவர்களுக்கு விளக்கமறியல்

தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக நேற்றுமுன்தினம் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 7பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

SAITM தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று முன்தினம் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் பெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.


போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் கடுமையான தாக்குதல்களையும் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தையும்மேற்கொண்டமையுடன் போராட்டத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் நான்கு பிக்கு மாணவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 7 பேரை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் நேற்று கொழும்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது ஏழு பேரையும் இந்த மாதம் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுள் பல்கலைக்கழக மாணவி ஒருவரும் உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# நெடுந்தீவுக்கான படகு சேவைக்காக 'நெடுந்தாரகை' நேற்றுக் கையளிப்பு


## முதலமைச்சர், ஆஸி.தூதுவர் மற்றும் பிரமுகர்களுடன் வெள்ளோட்டம்











யாழ்ப்பாணம், ஜன.21

ஆஸ்திரேலிய அரசு மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் நிதிப்பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட நெடுந்தீவுக்கான நெடுந்தாரகை படகு சேவை நேற்று பயணிகள் சேவைக்காக வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரால் கையளிக்கப்பட்டுள்ளது.

அதை அடுத்து நெடுந்தாரகை வெள்ளோட்டத்தை நேற்று ஆரம்பித்தது.

நெடுந்தாரகைப் படகு ஜனவரி 5 ஆம் திகதி மாலையில் டொக்கியாட் நிறுவனத்தில் இருந்து புறப்பட்டு 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் பகுதியை வந்தடைந்திருந்தது. குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கு இடையில் பயணிகள்சேவையில் ஈடுபடுவதற்காக ஆஸ்ரேலிய அரசின் பெரும் நிதிப் பங்களிப்புடனும் மற்றும் உலக வங்கியின் நிதிப் பங்களிப்பில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 150 மில்லியன் ரூபா செலவில் இந்தப் புதிய படகு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் படகை அமைக்கும் பணி கொழுப்பில் உள்ள படகு கட்டும் நிறுவனமான டொக்கியாட் நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்பிரகாரம் 80 பயணிகள் பயணிக்கக் கூடிய போதிய வசதிகளுடன் புதிய படகு அமைக்கப்பட்டது. இதற்கான இயந்திரமும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டு குறித்த படகில் பொருத்தப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் இந்தப் படகுக்கான பெறுமதி சேர் வரியான 18 மில்லியன் ரூபாவை டொக்கியாட் நிறுவனம் தளர்த்தியிருந்தது.

நெடுந்தாரகையின் ஓட்டுநர் உள்ளிட்ட பணிக்காக கொழும்பு துறைமுக அதிகார சபையின் கீழ் உள்ள மாபொல நிறுவனத்தில் 6 பணியாளர்களை இணைத்து பயிற்சியும் அளிக்கப்பட்டது. அவர்கள் பயிற்சியை நிறைவு செய்து யாழ்ப்பாணம்திரும்பியுள்ளனா். இந்த 6 பணியாளர்களையும் செயல்முறைப் பயிற்சிக்காக வட தாரகையில் இணைத்து பயிற்சி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே நெடுந்தாரகை படகை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் பிறைஸ் ஹச்சீசன், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தப்பா, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் திட்ட அதிகாரிகள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், வடக்கு மாகாண அமைச்சர்கள் ஆகியோர் பங்கு பற்றினர்.

(ஐ-7)

# நல்லாட்சி அரசு இளைஞர், யுவதிகளுக்கு அதிக வேலை வாய்ப்பை வழங்கியுள்ளது

### *விஜயபால ஹெட்டியாராச்சி எம்.பி. சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜன.21

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் ஊடாக அதிக வேலை வாய்ப்புகளை நல்லாட்சி அரசு இளைஞர், யுவதிகளுக்கு பெற்றுக் கொடுத்துள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாம் இதுவரையில் பெற்றுக் கொடுத்துள்ள தொழில் வாய்ப்புகள் ஊடாக 40 ஆயிரம் ரூபா வரையிலான சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொண்ட இளைஞர்கள்.

அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுமென்றால் அவற்றால் நாட்டிலுள்ள மக்களுக்கு பயன் இருக்க வேண்டும்.

கடந்த ஆட்சியில் அபிவிருத்தி என்ற பெயரில் அம்பாந்தோட்டையில் துறைமுகம், மத்தளயில் விமான நிலையம் மற்றும் வீதி கட்டமைப்புகள் என்பன மேற் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றால் எவ்வித பிரயோசனமும் இல்லை.

ஆனால், நல்லாட்சிக்குள் பத்து லட்சம் வேலை வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதில் பிரதமரும், ஜனாதிபதியும் சிறப்பாகச் செயற்படுகிறார்கள்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையானது உண்மையான ஊடக சுதந்திரம், திறைசேரி நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை என்பவற்றை கருத்தில் கொண்டே வழங்கப்பட்டது.

ஆனால், சிலர் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையானது நிபந்தனைகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது எனக் கூறி மக்களைத் திசை திருப்புவதற்குப் பலர் முற்படுகின்றனர்.

இதேபோன்று பாதயாத்திரை மற்றும் அம்பாந்தோட்டை சம்பவம் என்பவற்றைக் கொண்டு அரசைக் கவிழ்க்க முடியும்



என்று எதிர்ப்பார்த்தனர்.

அதேபோன்று மீண்டும் ஒன்றிணைந்த கட்சியினர் நுகேகொடயில் ஒன்றுகூடி அரசைக் கவிழ்ப்பதற்கான முயற்சியில் இறங்கினார்கள்.

ஆனால், நாடாளுமன்றத்தில் குறைந்த ஆசனங்களைப் பெற்றவர்கள் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு ஆட்சியைக் கவிழ்ப் பது என்பது முடியாத விடயம் .- என்றார்.

(ஐ)

# கெற்பேலி விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

*தென்மராட்சி, ஜன.21*

*மிருசுவில், கெற்பேலி பகுதியில் படிரக வாகனமும் பல்சர் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துள்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதான உதயகுமார் வினோத்குமார் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார். சடலம் சாவகச்சேரி வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.*

*படி வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ-21-23)*

# சைவத் திருச்சபை ஏற்பாட்டில் சிவ மகா மந்திர யாகம்!

யாழ்ப்பாணம், ஜன.21

இலங்கை வாழ் மக்களுக்கு சாந்தி, சமாதானம் ஆகியன நிரந்தரமாகக் கிடைக்க வேண்டி ''உலக சைவத்திருச்சபை'' இலங்கை அமைப்பினரால் மாபெரும் சிவ மகாமந்திர மகா யாகம் செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது.

காலை 9மணிமுதல் 3மணி வரை இடம்பெறும் இந்த யாகம் இன்று சனிக்கிழமை பெரிய கடை மன்னாரில் அமைந்துள்ள அருள்மிகு சிவபூமி ஞான வைரவர் கோயிலிலும், நாளை யுனிற் 01 பாவற் குளம், வவுனியாவில் அமைந்துள்ள திருநாகேஸ்வரம் சிவாலயத்திலும் எதிர் வரும் 29 ஞாயிறு பூநகரி முழங்காவில் சின்னக் கதிர்காமம் ஸ்ரீ முருகன் ஆலயத்திலும்-

30ஆம்திகதி திங்கட்கிழமை இணுவிலில் அமைந்துள்ள அருள்மிகு ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்திலும் இடம்பெறவுள்ளன. அனைத்து அன்பர்களையும் இம் மகா யாகத்தில் கலந்து கொள்ளுமாறு 'உலக சைவத் திருச்சபை' இலங்கை அமைப்பினர் அழைக்கின்றனர்.

யாகம் நடைபெறும் நாள்களில் அன்ன தானமும் இடம் பெறும். (இ-ச)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சம்பந்தன் ஐயாவின் எதிர்பார்ப்பும் தளபதி சுமந்திரனின் நம்பிக்கையும்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேரில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் நடத்திய பொங்கல் விழா, அக்கட்சியைப் பொறுத்தவரை பொங்கிப் பூரித்திருக்கின்றது எனலாம்.

"மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வித்திலும் மக்கள் முழுமையாகப் பெருமையடையும் வகையிலும் புதிய அரசமைப்பை உருவாக்குவோம்!" என்று தமது எதிர்பார்ப்பை அங்கு பறைசாற்றியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

அவரது தளபதியான சட்டத்தரணி சுமந்திரன் இன்னும் ஒருபடி மேலே போய் அறிவித்திருக்கின்றார்.

" எங்களை நாங்களே ஆளக்கூடிய அரசமைப்பை உருவாக்குவோம்" - என்று பொங்கல் திடசங்கற்பம் பூண்டிருக்கின்றார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

"எல்லாத் தடங்கல்களையும் மீறி தற்போதுள்ள மக்கள் சக்தியோடும் உலக ஆதரவோடும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் - எமது மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய விதத்திலான உரித்தினை - ஏற்படுத்தும் புதிய அரசமைப்பை உருவாக்குவோம்" - என்று திடசங்கற்பத்துடன் பிரகடனப்படுத்தியிருக்கின்றார் சம்பந்தன் ஐயாவின் தளபதி சுமந்திரன்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்குமான விடயங்களை உள்ளடக்கியதாக, புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் இப்போது முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த நடவடிக்கைகளில் தமிழர் தரப்பில் நேரடியாகப் பங்கு பற்றுவார்கள் சம்பந்தன் ஐயாவும் அவரது தளபதி சுமந்திரனும் தான்.

பிரதானமாக, அரசமைப்பு உருவாக்கல் பணியில் அரச வட்டாரங்களோடும், உள் வீட்டிலும், வெளித் தரப்பிலும் அதிகம் ஊடாடுபவர் சுமந்திரனே. ஆகவே அவ்விடயம் தொடர்பில் அவரது அறிவிப்புகள் - அதற்காக அவர் தேர்ந்தெடுக்கும் வாசகங்கள், வாக்கியங்கள் எல்லாமே - கூர்ந்து அவதானிக்கத்தக்கவையாகும்.

அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் எல்லாமே தமிழர்களின் நியாயமான எதிர்பார்ப்புகளுக்கு மாறாகவே சென்று கொண் டிருக்கின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளே குறை கூறி, அதிருப்திக் குரல் எழுப்பி வருகின்றன.

வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை; சமஷ்டி கிடையாது; பௌத்த மதத்துக்கு மேன்மையான இடம் என்ற நிலைப்பாட்டில் மாற்றம் வரவே வராது - இப்படியெல்லாம் தென்னிலங்கைத் தரப்புகள் - ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தரப்புகள் - திட்டவட்டமாகவும், தெளிவாகவும், வெளிப்படையாகவும் அறிவித்துவிட்டன.

இதோ நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாக கூடி, அதன் வழிகாட்டுக் குழு சமர்ப்பிக்கப் போகும் நகல் அரசமைப்பு யோசனைக்கான வடிவத்தை ஆராயப் போகின்றது என்று கருதும் அளவுக்கு நிலைமை வந்துள்ளது.

அத்தகைய சூழலில் கூட முழு நம்பிக்கைத் தரும் உரைகளை சம்பந்தன் ஐயாவும், தளபதி சுமந்திரனும் நிகழ்த்துகின்றமை சாதாரண விடயமல்ல.

சுமந்திரன் இன்னும் கொஞ்சம் மேலே போய் கருத்துக் கூறியுள்ளார்.

புதிய அரசமைப்பை உருவாக்கத்துக்கான பிரேரணை வந்தபோதும் கூட, இதேபோன்ற எதிர்ப்புகள் கிளம்பின. இந்த விடயம் நகருமா என்று நாம் கூட அச்சமடைந்தோம். ஆனால் புதிய அரசமைப்பை உருவாக்கவும், அதற்காக முழு நாடாளுமன்றையும் அரசமைப்பு உருவாக்க சபையாக மாற்றவும் வழிசெய்யும் பிரேரணை எந்தவித எதிர்ப்புகளுமின்றி ஏகமனதான தீர்மானமாக நிறைவேறியது. - இப்படித் தமது உரையில் சுமந்திரன் சுட்டிக்காட்டுகின்றார்.

அதாவது, ஆரம்பத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கமே நடக்காது என்று கருதப்பட்ட போதிலும் - அது குறித்து அதிகம் பேசப்பட்ட போதிலும் - அந்த விடயம், அதையும் தாண்டி வெற்றிகரமாக நகர்ந்தது. அது போல இப்போதும் நியாயமான தீர்வைக் கொண்ட புதிய அரசமைப்பு உருவாகுமா என்ற சந்தேகம் பல தரப்புகளினாலும் முன்வைக்கப்பட்டாலும் கூட, அவை எல்லாவற்றையும் தாண்டி, விடயம் ஒப்பேறும் என்ற முழு நம்பிக்கையையே சுமந்திரன் முன்வைக்க முயற்சின்றார்.

இது விடயத்தில், இலங்கை அரசு மீதான சர்வதேச அழுத்தம் அல்லது இலங்கைத் தமிழருக்கு நியாயம் செய்யப்பட வேண்டும் என்ற சர்வதேச கருத்து நிலைப்பாடு தங்களுக்குப் பெரும் பலம் என்ற சாரப்படவும், அதில் முழு நம்பிக்கை வைத்தும், அதில் தங்கி நின்றும் சுமந்திரன் கருத்து வெளியிடுகின்றமையை அவரது பொங்கல் உரை வெளிப்படுத்துகின்றது.

சம்பந்தன் ஐயாவின் எதிர்பார்ப்பும், சுமந்திரனின் நம்பிக்கையும் பொய்த்துப் போகாவிட்டால் ஈழத் தமிழர்கள் மகிழ்வர்.

பொய்த்துப் போய்விட்டால்...? அதன் பிறகு என்ன செய்ய வேண்டும் என்பதை இதில் நம்பிக்கையூட்டி, தமிழர்களைத் தம் வழிப்படுத்திய சம்பந்தன் ஐயாவும் தளபதி சுமந்திரனும் தான் விளக்கமும் கூறவேண்டும்.




## ஊடகவியலாளர் அச்சுறுத்தலின்றி கடமைகளை நிறைவேற்ற வாய்ப்பு

### ஊடகத்துறை அமைச்சர் கருணாதிலக தெரிவிப்பு

ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் இன்றி தங்கள் கடமைகளை நிறைவேற் றுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறைஅமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிக்கின்றார்.

ஊடகதர்மத்துக்கு உட்பட்டு ஊடக வியலாளர்கள் சரியான தகவல்களை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அமைச்சில் நேற்று இடம் பெற்ற ஊடகவியாலாளர்களுக்கு தொழிற்றுறை பயிற்சிகளை பெறுவதற்கானபுலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத் தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

"நாட்டில்தற்போது வெள்ளைவான் கலாசாரம், தனி நபர்கள் மீது தாக்குதல் மேற்கொள்வது, கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்கள் இல்லாது ஒழிக்கப் பட்டுள்ளன. எனினும் ஆங்காங்கே ஒருசில சம்பவங்கள் மாத்திரமே பதிவாகின்றன.

''ஊடகவியலாளர்களுக்கான சுதந்திரம் பற்றிய அறிவு ஊடக வியலாளர்களுக்கு மாத்திரமன்றி ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இருக்க வேண்டும். இல்லாவிடின் அதுவும் ஊடக அச்சுறுத்தலாகவே அமையும்.

மக்களை நல்வழிப்படுத்துவது ஊடகங்களின் கடமை. ஊடக தர்மத்துக்கு உட்பட்டு அந்தக் கடமையை ஊடகங்கள் நிறைவேற்ற வேண்டும்.

ஊடகவியலாளர்களின் கல்வித் தகைமையை மேம்படுத்தும் பொருட்டு ஊடக கற்கை நெறிகளைக் கற்பிக்கும் சர்வதேச தரத்திலான கல்வி நிலையம் ஒன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.''- என்றார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய ஊடகத்துறை பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதாரண,

இந்தப் புலமைப்பரிசில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் லஞ்சமல்ல.

பயனாளர்கள் தெரிவு சுதந்திரமாக இயங்கும் ஒரு குழுவால் தெரிவு செய்யப்பட்டது. இதில் பாரபட்சம் காட்டப் படவில்லை என்று தெரிவித்தார். (எ)

### இலங்கை மாலுமிகளுக்கு சர்வதேச அங்கீகாரச் சான்றிதழ்:

## உக்ரைன்-டென்மார்க்குடன் விரைவில் புதிய ஒப்பந்தம்

கொழும்பு, ஜன.21

இலங்கை மாலுமிகளுக்கு சர்வதேச கப்பல்களில் பணியாற்றக் கூடிய வகையிலான அங்கீகாரச் சான்றிதழ் பெற்றுக் கொள்வது தொடர்பில் இலங்கை அரசு உக்ரைன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட உள்ளது.

மாலுமிகள் வெளிநாட் டுக் கொடியின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ள கப்பல்களில் பணி புரிய வேண்டும் எனின், அவர்கள் தேர்ச்சி சான்றிதழுக்கு மேலதிகமாக அங்கீகாரச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

இதற்காக சம்பந்தப்பட்ட நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் வேண்டும். இலங்கை இதுவரை 30 நாடுகளுடன் இவ்வாறான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

இதனடிப்படையில் மாலுமிகளுக்கான சான்றிதழ்களை வழங்குவது தொடர்பில், இலங்கை, உக்ரைன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

துறைமுக மற்றும் கப்பல் துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் ஒப்பந்தங்களைத் துரிதப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ)

## பொலிஸ் திணைக்கள கீழ் மட்ட அதிகாரிகளுக்கு பதவி உயர்வு!

### விரைவில் வழங்கத் தீர்மானம்

கொழும்பு, ஜன.21

பொலிஸ்திணைக்களத்தில் கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கான பதவி உயர்வு மற்றும் கொடுப்பனவு முறையில் திருத்தங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பொலிஸ் சார்ஜன் மற்றும் கான்ஸ்டபிள் பதவிகளிலுள்ள 84 ஆயிரம் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பீ.எச். மனதுங்க தெரிவித்தார்.

தற்போது அவர்கள் பெரிய மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்நிலைமை பொலிஸ் உத்தியோகத்தர்கள் திறம்பட பணிபுரிவதற்கு இடையூறாக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எனவே, இந்த உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளதுடன், கொடுப்பனவுகளை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

### நாளை

22.01.2017
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: விசாகம் பி.ப.12.38 வரை
திதி: தசமி மு.இ. 11.24 வரை

சுபநேரம் : 9.35 – 11.05 வரை
இராகுகாலம் : 5.05 – 6.35 வரை

# இலங்கையின் நீர் வளத்தை அழிக்க வரவுள்ளது கொக்கோகோலா கம்பனி!

கொழும்பு, ஜன.21

ஆசிய நாடுகளுக்கு விநியோகம் செய்வதற்கு இலங்கையில் கொக்கோ கோலா உற்பத்தி தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. இது இலங்கையின் நீர் வளத்தை அழிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.



இலங்கையில் நீர் வளம்சிறப்பாக இருக்கின்றமையே இங்கு தொழிற்சாலை ஆரம்பிக்கக் காரணமாக உள்ளது என்று சுட்டிக்காட்டடப்பட்டுள்ளது.

ஒரு லீட்டர் கொக்கோ கோலா உற்பத்தி செய்வதற்கு அதன் உற்பத்தி முறையின் பிரகாரம் 442-618 லீற்றர் நீர் பயன்படுத்தப்படுகிறது என்று ''வோட்டர் பூட் பிறின்ரி நெற்வேக்'' என்னும் அமைப்பு தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

இங்கு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு இலங்கையும் வறட்சி நாடாக மாறுவதோடு விவசாயிகளும் பாதிக்கப்படுவர் என்றும், ஏற்கனவே இந்தியாவில் பல மாநிலங்களில் மக்களால் கொக்கா கோலா தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்கள் இலங்கையில் கால் பதித்து இலங்கையையும் வரண்ட பிரதேசமாக மாற்றப்பார்க்கின்றனர் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

இங்கு கொக்கோ கோலா உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், அதனால் ஏற்படும் தொழில் வாய்ப்புக்கள், அரசுக்குக் கிடைக்கும் வருமானம் என்பவற்றை விட பாதகமான விடயங்களே அதிகமாகக் காணப்படும்.

ஆகவே, இது இலங்கையில் ஆரம்பிக்கப்படாமல் தடை செய்யப்படுவதே இலங்கை மக்களுக்கு உகந்தது.

இலங்கையில் கூட கடந்த வருடம் சூழல் மாசடைவதாகக் கூறி பியகமவில் உள்ள கொக்கோ கோலா கம்பனிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## மோசடிகளை ஒப்புக்கொண்டார் கபிர் ஹாசிம்!

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன என்று அமைச்சர் கபிர் ஹாசிம் ஒப்புக்கொண்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விமான சேவை நிறுவனத்தில் ஒரு மாபியா இயங்கி வருகின்றது என்பதை ஒப்புக் கொள்கின்றேன். இந்த விடயம் தொடர்பாகத் துரித கதியில் விசாரணைகள் நடத்தப்பட உள்ளன.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் பெரியளவில் மோசடிகள் இடம்பெற்றன. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கூட்டுஎதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களைப் பிழையாக வழிநடத்தும் நோக்கில் அண்மையில் எனக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தனர். இந்த முறைப்பாடு ஒரு பொய்யான முறைப்பாடாகும்.- என்றார்.

(ஐ)

## ஈழத் தமிழர்களின் போராட்டத்தை எம்.ஜி.ஆர். போல் ஆதரியுங்கள்

### எம்.ஜி.ஆர். பிறந்த தினத்தில் சிவாஜிலிங்கம் உரை

வடமராட்சி, ஜன.21

தமிழக முன்னாள் முதலமைச்சரும் புரட்சித்தலைவருமான எம். ஜி. ஆர். ஈழத்தமிழர்களின் போராட்டத்தை ஆதரித்து எந்த அளவுக்கு உதவி புரிந்தாரோ அதேபோல அனைவரும் போராட்டத்தை ஆதரித்து உதவி செய்ய முன்வரவேண்டும்.

- இவ்வாறு வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரி வித்துள்ளார்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி எம். ஜி. ஆர். நற்பணி மன்றத்தால் மீளவும் நிர்மாணிக்கப்பட்ட எம். ஜி. ஆரின் முழு உருவச் சிலையை அன்னாரின் பிறந்த தினத்தன்று சிவாஜிலிங்கம் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

தாய்த் தமிழகத்திலும் ஈழத்திலும் மட்டுமின்றி உலகெங்கும் புரட்சித் தலைவரின் 100 ஆவது பிறந்தநாள் கொண்டாடப்படுகின்றது.

எம்.ஜி.ஆர். மறைந்து 30 ஆண்டுகளுக்குப் பின்னரும் கோடானு கோடி மக்களின் மனதில் அவர் என்றும் நிலைத்து நிற்கிறார். புரட்சித் தலைவராக, முதலமைச்சராக இருந்த போதும் சிறந்த மனிதாபிமானமிக்க தலைவராகத் திகழ்ந்தார் எம்.ஜி.ஆர்.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டபோது 3 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர். அந்தவேளை தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்ற மக்கள் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியின் அனுமதியோடு அனைத்து உதவிகளையும் செய்து அவர்களுக்கு அடைக்கலம் வழங்கினார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னர் ஆட்சியைப் பிடித்த ஜெயலலிதா, ஆரம்பத்தில் ஈழத்தமிழர்கள் விடயத்தில் கரிசனை மிக்கவராக இருந்தார் ஈழத் தமிழர்களின் உரிமை நிலை நாட்டப்பட வேண் டும் எனவும் போர்க் குற்றம் தொடர்பாகச் சர்வதேச விசாரணை அவசியமும் எனவும் வலியுறுத்தினார்.

எம்.ஜி.ஆரின் சிலை கடந்த காலங்களில் உடைக்கப்பட்டாலும் அது வல்வை மண்ணில் மீண்டும் எழுந்திருக்கின்றது. சிலை அமைந்துள்ள இடத்துக்கு எம்.ஜி.ஆர். சதுக்கம் என்று பெயரிடப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். சதுக்கத்தை அழகாகவும் புனிதமாகவும் வைத்திருக்க வேண்டும். அதற்கென மாகாண சபை நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாவை ஒதுக்கித் தருகிறேன்.-என்றார்.(ஐ-30)

## உலக வரலாற்றில் மிக வெப்பம் மிகுந்த ஆண்டாக நாசா அறிவிப்பு

கொழும்பு,ஜன.21

2016 ஆம் ஆண்டுதான் பதிவு செய்யப்பட்டதிலேயே மிகவும் வெப்பமான ஆண்டு என்று நாசா மற்றும் அமைப்புகள் கூறியுள்ளன.

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டை தொடர்ந்து 2016 ஆம் ஆண்டிலும் மிக அதிகமான சராசரி வெப்பநிலை பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது மிகவும் எதிர்பாராதது என்று தெரிவிக்கப்பட்ள்ளது.

குறிப்பிட்ட பதிவுகளின்படி, க்ரின் ஹவுஸ் வாயுகள் மற்றும் கார்பன் டை ஒக்சைட் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்பதை உணர்த்துகிறது என்று நாசா கூறியுள்ளது.

2016 ஆம் ஆண்டு நிலப்பரப்பு மற்றும் கடற்பரப்பில் நிலவிய சராசரி வெப்பநிலை அளவு 58.69 டிகிரி ஆகும். இது 20 ஆம் நூற்றாண்டில் நிலவிய சராசரி வெப்ப நிலை அளவை விட 1.69 டிகிரி அதிகம்.

இந்த நிலையில் உலக வரலாற்றின் மிக வெப்பமான ஆண்டாக 2016 அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## மட்டக்களப்பில் கூட்டமைப்பின் பொங்கல் விழா







தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த நான்காவது பொங்கல் விழா மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கல்லடி பாலத்திலிருந்து பண்பாட்டு பவனி வருவதையும், எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட அதிதிகள் மலர்மாலை அணிவித்து அழைத்து வரப்படுகின்றமையையும் படங்களில் காணலாம். (ஐ)

## அன்புலன்ஸ் வசதியின்றி முள்ளியான் ஆஸ்பத்திரி!

வடமராட்சி கிழக்கு முள்ளியான் வைத்தியசாலையில் மூன்று மாதங்களுக்கு மேலாக அம்புலன்ஸ் வசதி இல்லை என்று அப்பகுதி மக்களால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வடமராட்சிக் கிழக்கின் இறுதிப் பகுதியில் உள்ள இந்த முள்ளியான் வைத்தியசாலையில் எந்நேரமும் ஓர் அம்புலன்ஸ் இருக்க வேண்டும் என்பது சுகாதார பணிப்பாளரின் பணிப்பு.

ஆனால் இந்த வைத்தியசாலையில் இருந்த அம்புலன்ஸ் திருத்த வேலைக்காக சென்று மூன்று மாதங்கள் கடந்துள்ள போதும் இதுவரையில் திரும்பி வரவில்லை.

இந்த வைத்தியசாலையில் இருந்து நோயாளர்களை மாற்றுவதாயின் பளை மருதங்கேணி, அம்பன் வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. பல கிலோமீற்றர்கள் கடந்து செல்வதற்குள் உயிர் ஆபத் துக்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது என்று கூறப்படுகிறது.

எனவே, முள்ளியான் வைத்தியசாலைக்கு உடனடியாக ஓர் அம்புலன்ஸ் வழங்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சிடம் அப்பகுதி மக்கள் கோருகின்றனர்.

(ஐ-40)

# அநாதரவான நிலையில் காத்தான்குடியில் கார்!



மட்டக்களப்பு,ஜன.21

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவு பகுதியில் கடந்த 3 நாள்களாகக் கவனிப்பாரற்ற நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டது என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பிரதான நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 20 மீற்றர் தூரத்தில், எவரும் உரிமை கோராத நிலையில் கடந்த 3 நாள்களாக இந்தக் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதனை அவதானித்த அந்த வீதியில் வசிக்கும் மக்கள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இதனை அடுத்து உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் காரை மீட்டுள்ளனர். அவர்கள் இது தொடர்பான விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் 'ஒன்லைன்' இல் கார் உரித்துப் பற்றி ஆராய்ந்தபோது, பிரஸ்தாப கார் ஓட்டமாவடியைச் சேர்ந்த ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. (ச)

# ஜனாதிபதி, பிரதமரின் முயற்சிகளை குழப்பியடிக்க சில சக்திகள் முயற்சி!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்பந்தன்



திருகோணமலை,ஜன.21

2017ஆம் ஆண்டு வறுமையை ஒழிக்கும் ஆண்டாக ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல ஆக்கபூர்வமான முயற்சிகளை ஜனாதிபதியும், பிரதமரும் மேற்கொள்கின்றார்கள். இவற்றைக் குழப்பியடிக்க சில சக்திகள் முயற்சிக்கின்றன. இவற்றுக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடு முன்னேற்றம் அடைவதை நாம் விரும்புகின்றோம். ஜனாதிபதியும் பிரதமரும் மக்களால் ஜனநாயக அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்கள். சர்வதேச மட்டத்திலிருந்து நம் நாட்டுக்குப் பல நாடுகள் உதவிகளை செய்ய முன்வந்துள்ளன. ஜி.எஸ்.பி. 'பிளஸ்' வரிச்சலுகை தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் காரணமாக ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பதோடு 5 லட்சத்துக்கும் அதிகமான இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறும்.

தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்குத் தேவையான வருமானம் ஈட்டும் செயற்பாடுகளைத் துறைசார் ரீதியாக விருத்தி செய்தால் தான் வறுமையை ஒழிக்க முடியும். இதற்கு அரச அதிகாரிகள் உட்பட அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும்.-என்றார். (ச)

# மாணவர்களின் கட்டுப்பாட்டில் கிழக்கு பல்கலை நிர்வாக கட்டடம்!

மட்டக்களப்பு,ஜன.21

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கடந்த திங்கட்கிழமையில் இருந்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற 2 ஆம் மற்றும் 3 ஆம் வருட மாணவர்களைப் பல்கலைகழக விடுதியை விட்டு வெளியேறுமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் பல்கலைக் கழகத்தின் அறிவித்தலை பொருட்படுத்தாமல் நிர்வாகக் கட்டடத்தை இரவு பகலாக மாணவர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்நிலையில் மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்டு அதற்கான மாற்றுத் தீர்மானங்கள் வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில் 2 ஆம் மற்றும் 3 ஆம் வருட மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு ஆறு வாரங்களுக்குப் பின் வாடகை வசதி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான ஒழுங்கு ஏற்பாடுகள் ஏற்படுத்தித் தரப்படும் என அறிவித்திருந்தனர்.

இந் நிலையில் இந்த மாணவர் குழு தீர்மானத்தை ஏற்க முடியாது எனத் தெரிவித்து தொடர் முற்றுகை எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழகம் அறிவித்துள்ள தீர்மானத்தை ஏற்க முடியாது. இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கையை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் எதிர்ப்பு முற்றுகை தொடர்ச்சியாக நடைபெறும் என மாணவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

எதிர்ப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்களில் அதிகமானவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்.

நிர்வாக கட்டடத்துக்குள் எவரும் உள்நுழைய முடியாதவாறு அவர்கள் சூழ்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த கலைப் பீட மாணவர்கள் இதிலிருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நீண்ட வறட்சிக்குப் பின் மட்டக்களப்பில் மழை!

மட்டக்களப்பு,ஜன.21

நீண்ட வறட்சிக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை முதல் மழை பெய்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வறட்சிக்குட்பட்டிருந்த பல இடங்களில் மழை நீர் தேங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் பெரும்போக வேளாண்மை பெருமளவில் சேதமடைந்துள்ளது.

இம்முறை இந்த மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கரில் பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் இதில் பெருமளவிலான நெல் வயல்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில்மழை பெய்ய ஆரம்பித்திருப்பதால் விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியான சூழல் காணப்படுகின்றது

தொடர்ந்தும் மழை பெய்யும் என்று மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி கே.சூரியகுமார் தெரிவித்தார். (ச)

# ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பில் கண்டனப் பேரணி



மட்டக்களப்பில்



வாழைச்சேனையில்

தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு காந்தி பூங்கா மற்றும் வாழைச்சேனை ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கண்டனப் பேரணிகள் இடம்பெற்றன.

இதன்போது இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் ஒன்று திரண்டு ஜல்லிக்கட்டை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதில் 'தமிழரின் பண்பாட்டு மரபை அழிக்காதே', 'தமிழரை அடக்காதே', 'இந்திய அரசே உலகத் தமிழர்கள் உன் கொட்டத்தை அடக்கத் திரண்டெழுவர்', 'சோழனின் கொடி பறக்கும்;சோழியின் குடும்பி அறும்', 'ஜல்லிக்கட்டு எம் உரிமை; அள்ளிக் கட்டு அரசை', 'போராட்டம் எம் இனக்குணம்; சீண்டாதே சிதறுவாய்'போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

தமிழரின் வீரத்தை உலகுக்குப் பறைசாற்றும் பாரம்பரிய மரபு வழியாக வந்த காளையை அடக்கும் ஜல்லிக்கட்டுக்கு தமிழகத்தில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கப் பல நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள்நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மணமக்கள்
☎0114320017- 8

அலுவலக நேரம்
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| 5524 \| கு<br>1976 \| நாவற்குளி \| 167 cm<br>Engineer \| இலங்கை<br>ரேவதி (மீனம்) \| கிறிஸ்தவம் | 7086 \| நா<br>1991 \| உடுவில் \| 164 cm<br>Data Entry \| இலங்கை<br>பூடாரம் (தனுசு) |
| 6367 \| வே<br>1975\| மாவிடப்புரம் \| 152cm<br>Financial Development officer \|செ:12<br>இலங்கை\|அஸ்வினி (மேடம்) \|கி.பா:36 | 6882 \| ப<br>1983\| அல்வாய் \| 155 cm<br>Teacher\| இலங்கை<br>சதயம் (கும்பம்) \| கி.பா: 32 \| செவ்: 1 |
| 4069 \| வே<br>1972\| பருத்தித்துறை \| 152 cm<br>Laborer \| இலங்கை<br>புனர்புசம் (மிதுனம்) \|கி.பா: 38\|செவ்:4 | 4066 \| கு<br>1970\| வல்வெட்டிதுறை\| 162 cm<br>Librarian \|இலங்கை<br>பூரட்டாதி (கும்பம்)\| கி.பா: 21 \| செவ்: 7 |
| 7104 \| ப<br>1972\| இளவாலை \| 152 cm<br>Computer Teacher\| இலங்கை<br>ரோஹினி (ரிஷபம்) \|கி.பா: 36 | 3375 \| மு<br>1970\| யாழ்ப்பாணம் \| 155 cm<br>Tailor \| இலங்கை<br>மகம் (சிம்மம்) \| கி.பா: 33 \| செவ்:'12 |
| 5415 \| வே<br>1960\|கோப்பாய்\| 168 cm<br>Farmer\| இலங்கை<br>பூரம் (சிம்மம்) \| கி.பா:58 | 6729 \| வே<br>1969\| காங்கேசன்துறை\| 168 cm<br>Assistant clerk (Gov) \| இலங்கை<br>ரேவதி (மீனம்)\| செவ்: 7 |

அருந்ததி
www.arunthathee.com | 077 716 45 24
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27
(C-172)

# சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுகையில் மாணவர்களே உண்மையான செய்தியாளர்கள்




திகன பாடசாலை நிகழ்வில் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.21

நிலைபேறான அபிவிருத்திச் சமூகத்தின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுகையில், பாடசாலை மாணவர்கள் உண்மையான செய்தியாளர்களாகத் திகழ்கிறார்கள். இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

திகன ஹெங்கல்ல மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நிலைபேறான அபிவிருத்தி பாடசாலை சங்கங்களை அமைக்கும் நிகழ்ச்சியை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை ஒருபோதும் பிற்போட முடியாது. அபிவிருத்திப் பணிகளுக்காக வளிமண்டலத்தில் தீய வாயுக்களைச் சேர்த்து, உலக வெப்ப நிலையை அதிகரித்து மனித குலத்துக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்திய வல்லரசுகள் இலங்கைக்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றன.

இந்நாடுகள் இயற்கை பெறுமானங்களைப் புறக்கணித்து செயற்படுகின்றன.

இதன் காரணமாக மனிதர்களும் ஏனைய உயிரினங்களும் உயிர் வாழ்வது பெரும் சவாலாக மாறியுள்ளது. இலங்கையை இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நாடாக மாற்ற வேண்டுமாயின், வனவள அடர்த்தியை 50 சதவீதம் வரையிலாவது உயர்த்த வேண்டும். இயற்கை வளங்களைப் பாதுகாக்கத் தவறும் பட்சத்தில், இலங்கை மக்களின் இருப்புக் குறித்த சவால் எழும்.- என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில், நிலைபேறான பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் வழிகாட்டல் கோவையை கல்வி அமைச்சரிடம் ஜனாதிபதி கையளித்தார்.

மேலும், இந்தத் திட்டம் தொடர்பான இணையத் தளம் ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர்களான லக்ஸ்மன் கிரியல்ல, அகிலவிராஜ் காரியவசம், எம். எச்.அப்துல் ஹலீம் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளனர்.

## இந்தியாவின் ஐந்து மாநிலங்களுடன் தனித்தனியான வர்த்தக உடன்பாடுகள்!

### இலங்கை அரசின் புதிய திட்டம்

கொழும்பு, ஜன.21

இந்தியாவின் ஐந்து மாநிலங்களுடன் இலங்கை தனித்தனியாக வர்த்தக உடன்பாடுகளையும் செய்து கொள்ளவுள்ளது.

டாவோஸில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில், இலங்கையின் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனான சுதந்திர வர்த்தக உடன்பாடும், இந்தியாவுடனான எட்கா உடன்பாடும் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் இறுதி செய்யப்படும்.


இந்த உடன்பாடுகளின் மூலம், 2.5 பில்லியன் மக்களைக் கொண்ட சந்தைக்குள் இலங்கை நுழைய முடியும்.

இதைவிட, ஐந்து தென்னிந்திய மாநிலங்களுடனும் தனித்தனியான உடன்பாடுகளைச் செய்து கொள்ளும் திட்டமும் உள்ளது.

ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா,கேரளா, தமிழ்நாடு ஆகிய ஐந்து மாநிலங்களுடன் தனித்தனியான உடன்பாடுகளைச் செய்துகொள்வதன் மூலம், 500 பில்லியன் டொலர் பிராந்திய பொருளாதாரத்துக்குள் இலங்கை நுழையமுடியும்.

மேலும் பங்களாதேஷ், இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, மியன்மார் போன்ற வங்காள விரிகுடா நாடுகளுடன் மேலும் உடன்பாடுகளைச் செய்து கொள்வதற்கும் இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. ஜப்பான், பாகிஸ்தானுடனும் சுதந்திர வர்த்தக உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கும் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்க நாசகாரி கப்பல்!



கொழும்பு, ஜன.21

அமெரிக்க கடற்படையின் வழிகாட்டல் ஏவுகணை நாசகாரி கப்பலான யு.எஸ்.எஸ். ஹொப்பர், நான்கு நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளது.

அமெரிக்க நாசகாரி கப்பலுக்கு, கொழும்புத் துறைமுகத்தில் இலங்கைக் கடற்படையால் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

விமான எதிர்ப்பு, நீர்மூழ்கி எதிர்ப்பு மற்றும் தரை இலக்குகளைத் தாக்கும் பலநோக்கு போராயுத வசதிகளையும் கொண்ட இந்த நாசகாரி கப்பல், பேர்ள் துறைமுகத்திலிருந்து இயங்கி வருகிறது.

தற்போது இந்த நாசகாரி, இந்தோ-ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திரமான கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்திருக்கும் அமெரிக்க நாசகாரி கப்பல், இலங்கை கடற்படையினருடன் இணைந்து பயிற்சிகளிலும் பங்கேற்கவுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் இலங்கைக்கு வந்துள்ள ஐந்தாவது அமெரிக்கப் போர்க்கப்பல் இதுவாகும்.

ஏற்கனவே, யு.எஸ்.எஸ். புளூ ரிட்ஜ், யு.எஸ்.எஸ். நியூ ஓர்லியன்ஸ், யு.எஸ்.எஸ். பிராங்க் கேபிள் ஆகிய அமெரிக்க போர்க்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கும், யு.எஸ்.எஸ். சோமசெற் போர்க்கப்பல் திருகோணமலை துறைமுகத்துக்கும் கடந்த ஆண்டில் வந்திருந்தன.

அதேவேளை, கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம், இலங்கைக் கடற்பரப்புக்கு அருகாகப் பயணத்தை மேற்கொண்டிருந்த போது யு.எஸ். எஸ். ஹொப்பர் நாசகாரியின் மாலுமி ஒருவருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக, இந்தப் போர்க்கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்திருந்தது. அந்த மாலுமி இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டு கொழும்பில் சிகிச்சை அளிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு வருகிறது சீனாவின் பிரபல இணைய வணிக நிறுவனம்



கொழும்பு, ஜன.21

உலகின் மிகப் பிரபலமான சீன இணைய வணிக நிறுவனமான அலிபாபா, இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டி வருகிறது என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளது.

டாவோசில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில், அலிபாபாநிறுவனத்தின் தலைவரான ஜாக்மாவை, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போதே, இலங்கையில் முதலீடு செய்வதற்கான உடனடி நடவடிக்கையை ஆரம்பிக்கப் போகிறோம் என்று அலிபாபாவின் தலைவர் ஜாக்மா தெரிவித்துள்ளார்.

## இந்திய போர்க்கப்பல் கட்டுப்பாட்டாளர் இலங்கைக் கடற்படை தளபதியுடன் பேச்சு



கொழும்பு, ஜன.21

இந்திய கடற்படையின் போர்க்கப்பல் உற்பத்தி மற்றும் பொறுப்பேற்றல் கட்டுப்பாட்டாளர் வைஸ் அட்மிரல் தேஷ் பாண்டே, நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு நலன்கள் சார்ந்த விவகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவிடம் இருந்து இலங்கை இரண்டு ஆழ்கடல் ரோந்துப் படகுகளைக் கொள்வனவு செய்துள்ளது. கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வரும் இந்தக் கப்பல்கள் விரைவில் இலங்கையிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந்நிலையிலேயே, இந்திய கடற்படையின் போர்க்கப்பல் உற்பத்தி மற்றும் பொறுப்பேற்றல் கட்டுப்பாட்டாளர் இலங்கைக் கடற்படைத் தளபதியுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

# சுயநிர்ணய உரிமை நோக்கிய மாபெரும் மாநாடு பரிஸ் நகரில்

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை ஏற்பாடு

பரிஸ், ஜன.21

சுயநிர்ணய உரிமை நோக்கிய மாபெ ரும் மாநாடு ஒன்று பரிஸில் பெப்ரவரி 3 ஆம் திகதி இடம் பெறவுள்ளது. அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை இதற்கான ஏற் பாடுகளைச் செய்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அனைத்துலக ஈழத்தமிழர் மக்க ளவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

தமிழர்களின் மரபுவழித் தாயகம் பாதுகாக்கப்படவும், தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனமாக வாழ வும் வேண்டுமாயின் எமது சுய நிர்ணய உரிமையிலான நிரந்தர அரசியல் தீர்வே அவசியம். தமிழ ரின் தீர்வைத் தீர்க்கமான - தீர்மா னமாக உலகின் முன் உரைத்து நிற்கும் 'வட்டுக்கோட்டை தீர் மானம்' நிறைவேற்றப்பட்டு நாற்பதாவது ஆண்டுகளைக் கடந் தும், முப்பது ஆண்டுகளாக விடு தலைக்கான ஆயுதப் போராட்டம் நடந்தும் இன்றுவரை தமிழர் களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு முன்வைக்கப் படவில்லை.

மைத்திரி - ரணில் அரசமைப்பு மாற்றம்தமிழர்களுக்குஎந்தவிதமான அரசியல் தீர்வை வழங்கப்போகின் றது?

வடக்கு, கிழக்கு இணைக்கப் பட்டு தமிழர் தாயகத்தில் தமிழர் சுதந்திரமாக வாழ வழி கிட்டுமா?

எமது பாரம்பரிய நிலங்கள் திருப்பி எம்மிடமே ஒப்படைக்கப் படுமா?

தமிழர் தாயகத்தில் புதிதாக முளைக்கும் புத்தர் சிலைகளும் விகாரைகளும் நிறுத்தப்படுமா? போன்ற விடயங்களையும் வலி யுறுத்தி எமது தாயகம் நோக்கிய செயற்பாடுகளின் ஓர் அங்கமா கவே இந்தப் பரிஸ் மாநாடு அமைய வுள்ளது.

தமிழர் தாயகம், தேசியம், தன் னாட்சிஉரிமைகொண்டசுயநிர்ணய உரிமை நோக்கிய பாதையில் உறு தியுடன் செயற் பட்டுவரும் தமிழ்த் தேசிய அமைப்புக்களின் பிரதி நிதிகள் மற்றும் நோர்வே, கனடா, லண்டன், பின்லாந்து, டென்மார்க், ஜேர்மனி, சுவிஸ், சுவீடன், ஹொலண்ட் ஆகிய நாடுகளின் மனித உரிமை நிபுணர்கள், செயற் பாட்டாளர்கள், பிரான்ஸ் நாட்டு அரசியல் வாதிகள், இராஜ தந்திரிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கருத்தரங்கை பிரான்ஸ் நாடாளு மன்ற மண்டபத்தில் பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள தமிழருக்கான நட்பு குழுவினரின் அனுசரணையுடன் பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியத்தை நோக்கிய இந் தக் கருத்தரங்கை வலுவூட்டும் முகமாக தேசவிடுதலையில் பற்றுக் கொண்ட தனிநபர்கள் அமைப் புக்கள் பங்கேற்று எமது தாயக விடுதலைக்குப் பலம் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.- என் றுள் ளது. (ஐ)

# நாட்டின் வரி வருமானப் பணம் அரசியல்வாதிகளிடம் செல்லாது

### ஐ.தே.க. எம்.பி. அஜித் மன்னப்பெரும சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன.21

நாட்டின் வரி வருமா னத்தைப் பலன்தரும் வகையில் மக்களிடம் கொண்டு செல்வதே அரசின் இலக்கு என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசதகவல் திணைக் களத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனை கூறியுள் ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளவை வரு மாறு:-

நாட்டின் வரிப் பணத்தை எப்படிப் பாது காப்பது என்பதை நாம் தேடிப்பார்க்க வேண்டும்.

அந்தப் பணம் அரசி யல்வாதிகளின் பைகளுக் குள் செல்லாது. மக்க ளுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும். எமது அரசு மக்களின் வரிப் பணத்தைப் பாதுகாக்க நட வடிக்கை எடுத்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் வரி அறவீடுகள் மூலம் உழைக்கக் கூடிய 6 லட் சத்து 94 ஆயிரம் கோப்பு கள் மாத்திரமே இருந்தன. தற்போது அது 14 லட் சத்து 50 ஆயிரமாக உயர்ந் துள்ளது.

2014 ஆம் ஆண்டில் நாட்டின் ஏற்றுமதி 14.9 வீதமாக குறைந்திருந் தது. எதிர்காலத்தில் எமக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை கிடைக்க வுள்ளது.

முன்னாள்ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 200 ஆடைத் தொழிற் சாலைகளைத் திறந்தார். அவற்றில் 180 தொழிற் சாலைகள் மூடப்பட்டு விட்டன. மீண்டும் கிடைக்கவுள்ள ஜி.எஸ். பி.பிளஸ் வரிச்சலுகை மூலம் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும்.

கூட்டு எதிர்க்கட்சி நாட்டுக்குள் பொய் களைக் கூறிப் பொய் யான நபர்களை உரு வாக்கி வருகிறது. எதிர்க் கட்சியினருக்குத் தற் போது பேசுவதற்கு எது வுமில்லை என்பதால், பொய்யானவர்களை உரு வாக்கி வருகின்றனர்.


அரசுமேற்கொள்ளும் விடயங்களைத் தெளி வாக அறிந்து கொள்ளத் தகவல் அறியும் சட்டம் உள்ளது. இதில் மக்கள் பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். உழைக்கும் சமூகம் ஒன்றை நல்லாட்சி மூலம் கட்டியெழுப் புவோம்.-என்றார்.(ஐ)

## நேற்று 220 குடும்பங்களுக்கு அரிசி விநியோகம்

பருத்தித்துறை,ஜன.21

பருத்தித்துறை பிர தேசசெயலாளர் பிரிவில் வசிக்கும், வன்னியில் இருந்து வந்த மற்றும் புனர்வாழ்வு பெற்ற 220 குடும்பங்களுக்கு தலா முப்பது கிலோ அரிசி வீதம் உலக உணவுத் திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக் கிழமை பிரதேச செய லகத்தில் வைத்து இந்த அரிசி வழங்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் இருந்து வன்னியில் இருந்து வந்தவர் களுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட குடும்பங் களுக்குமே இந்த அரிசி வழங்கப்பட்டது. (ஐ-40)





நெல்லியடி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு வீதி விபத்து சம்பந்தமான விழிப்புணர்வை நெல்லியடிப் பொலிஸார் வழங்கினார்.
கடந்த வியாழக்கிழமை காலை பாடசாலையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் மாணவர்கள் பயன்பெற்றனர். இறுதியில் பொலிஸாரால் சைக்கிள்களுக்கு ஒளி தெறிப்பு ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன. (ஐ-40)

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.21

கோண்டாவில் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.30மணிவரையானசுப நேரத்தில்இடம்பெறவுள்ள. ஆலயத்தில் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 4 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள் ளது. (ஐ-21)

## வயோதிபப் பெண் பஸ்ஸில் மரணம்

பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த வயோதிபப் பெண் இருக்கையில் அமர்ந்த வாறு மரணமானார்.

பருத்தித்துறையில் இருந்து மீசாலைக்குத் தனது உறவினர் வீட் டுக்குச் செல்வதற்காகப் பயணித்துக் கொண் டிருந்த போதே கடந்த புதன்கிழமை சம்பவம் இடம்பெற்றது.

மீசாலையைச்சேர்ந்த சி.தங்கம்மா (வயது-75) என்பவரே உயிரிழந்த வராவர்.இவர் தும்பளை யில் வசித்து வந்தவர்.

பஸ் சாரதி உயிரிழந்த வயோதிபப் பெண்ணை மந்திகை ஆதார வைத் தியசாலையில் ஒப்ப டைத்தார். நெல்லியடிப் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண் டனர். (இ-22)

# இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் நாளை

யாழ்ப்பாணம், ஜன.21

அகில இலங்கை சைவப்புல வர் சங்கத்தால் 2016 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இளம் சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்த வர்களுக்கான பட்டமளிப்பும் சைவமாநாடும் நாளை ஞாயிற் றுக்கிழமை நல்லை திருஞான சம்பந்நர் ஆதீனத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவசித்தாந்தபண்டிதர் மு.திருஞான்சம்பந்தபிள்ளை தலைமையில்இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ம.வேதநாதன் கலந்து கொண்டு பட்டமளிப்பு பேரு ரையை நிகழ்த்தி தொடர்ந்து பட்டங்களை வழங்குவார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைசிரேஷ்டவிரிவுரையாளரும் சைவ சித்தாந்த முதுகலைமாணி கற்கைநெறி இணைப்பாளருமான திருமதி சுகந்தினி முரளிதரனும் கௌரவ விருந்தினர்களாக ஆக மப் பிரவீணர் சிவஸ்ரீ சோ.இ. பிரணதார்த்திஹரக்குருக்கள், சிவஸ்ரீ சி.குமாரராஜக்குருக்கள், சி.கந்தசாமி க.க.சிவபாலன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

காலை அமர்வு 8.30 மணிக்கு ஆரம்பமாகும். நல்லூர் கந்தன் ஆலயத்தில் வழிபாடு நிறைவின் பின்னர் அரங்க நிகழ்வுகள் இடம்பெறும். கொடிக் கவியைச் சைவப்புலவர் திருமதி சண்முக வடிவு தில்லைமணியும், திரு முறையை சைவப்புலவர்திருமதி கவிதா கதிரமலையும், வரவேற் புரையை சைவப்புலவர் செல்வி ஆனந்தி ஜெயரட்ணமும் நிகழ்த் துவர்.

கௌரவப் பட்டமளிப்பில் ஆகமப் பிரவீணர் சிவஸ்ரீ சோ. இ.பிரணதார்த்தி ஹரக்குருக்கள், சிவஸ்ரீ சி.குமாரராஜக்குருக்கள் ஆகியோருக்கு சிவாச்சாரிய திலக் பட்டமும், சி.கந்தசாமி, க.கு.சிவபாலன் ஆகியோருக்கு சைவப்புரவலர் பட்டமும், மூத்த சைவப்புலவர் சி.வேலாயுதம் (நெல்லியடி), சைவப்புலவர் அ.பரசுராமன் (திருகோணமலை), சைவப்புலவர் ஆ.கனகரத்தினம் (சுழிபுரம்) ஆகியோருக்கான கௌரவிப்பு இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர்கள் கௌரவிப்பு நிகழ்வில் சைவப்புலவர்கள் செல்லையா நவநீதகுமார் (கொழும்பு), திருமதி சரோஜினி தேவி சிவஞானம் ( திருகோண மலை), திருமதி சிவானந்த சோதி ஞானசூரியம் (மட்டக் களப்பு), திருமதி சண்முகவடிவு தில்லைமணி ( யாழ்ப்பாணம்), திருமதி கவிதாகதிரமலை (யாழ்ப் பாணம்) ஆகியோர் கௌரவிக் கப்படுவர்.

இளஞ் சைவப்புலவர், சைவப் புலவர் பட்டமளிப்பு நிகழ்வில் சைவப் புலவர்கள் 5 பேரும் இளஞ் சைவப்புலவர்கள் 23 பேரும் பட்டத்தைப் பெறவுள் ளனர். (ஐ-21-54)

காலைக்கதிர்
Kalaikkathir



# சீனாவின் வெள்ளை அறிக்கையும் இலங்கையுடனான நெருக்கமும்

## ஆசிய – பசுபிக் பிராந்தியத்தில் புதிய அணுகுமுறை

மொழியாக்கம் – நித்தியபாரதி

கடந்த வாரம் சீனாவினால் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை, ஏன் சிறிலங்காவிற்கு தற்போதும் எதிர்காலத்திலும் சீனாவின் உதவி தேவை என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

ஆசிய-பசுபிக் பாதுகாப்பு ஒத்துழைப்புடன் தொடர்புபட்ட சீனாவின் கோட்பாடுகள் அடங்கிய வெள்ளை அறிக்கை, இப்பிராந்தியத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் சீனாவின் நிலைப்பாடு எத்தகையது என்பதைத் தெளிவாகக் காண்பித்துள்ளது.

சீனா சிறிலங்காவின் அபிவிருத்திப் பங்காளனாக விளங்கியுள்ளது. சிறிலங்காவின் ஆட்சியைப் புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் சீனாவுடனான உறவில் சில அச்சுறுத்தல்கள் ஏற்பட்ட போதிலும் தற்போது மீண்டும் இந்த உறவு சுமுகமாக உள்ளாகியுள்ளது போல் தெரிகிறது.

2015 ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களிலும் மே 2016 இலும் மலேசியா, மியன்மார் மற்றும் சிறிலங்கா ஆகிய நாடுகள் வெள்ளப்பெருக்கினால் அதிகம் பாதிப்பைச் சந்தித்த போது, இந்த மூன்று நாடுகளுக்கும் சீனாவினால் உடனடியாக நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன என்று சீன அரசாங்கத்தால் கடந்த வாரம் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனா சிறிலங்கா தொடர்பில் தனது பங்கை ஆற்றுவதற்குத் தயாராக உள்ளது என்பதையே சீன அரசாங்கத்தின் இந்த அறிக்கையின் மூலம் அனுப்பப்பட்டுள்ள செய்தியாக உள்ளது. ஆனால் சிறிலங்கா இதற்கு கைமாறாக எதையாவது செய்ய வேண்டியுள்ளது என சீன அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை குறித்து நிற்கவில்லை.

'ஆசிய-பசுபிக் பாதுகாப்பு ஒத்துழைப்பு' தொடர்பான சீன அரசாங்கத்தின் வெள்ளை அறிக்கை அந்நாட்டு அரச சபை தகவல் அலுவலகத்தால் வெளியிடப்பட்டது.

### சீனாவின் அணுகுமுறை தொடர்பில் விளக்கம்.

இந்த அறிக்கையானது சீனாவின் பொதுவான, முழுமையான, ஒத்துழைப்பு சார்ந்த, நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய பாதுகாப்பு எண்ணக்கருக்கள் மற்றும் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் நிலைத்தன்மையை அடைந்து கொள்வதற்கான சீனாவின் அணுகுமுறை போன்றன தொடர்பாக விரிவாக விளக்கியுள்ளது.

பொது அபிவிருத்தியை அதிகரித்தல், பங்காளர்களைக் கட்டியமைத்தல், ஏற்கனவே நடைமுறையிலுள்ள பல்தரப்பு செயற்பாடுகளை முன்னேற்றுதல், ஆட்சியமைத்தல், இராணுவப் பரிமாற்றங்கள், பல்வேறு முரண்பாடுகளைக் களைவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்றன தொடர்பாகவும் சீன அரசாங்கத்தின் கொள்கை வகுப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஆசிய-பசுபிக் பிராந்தியம் பல்வேறு நாடுகளையும் உலகின் 60 சதவீதமான மக்கள் தொகையையும் கொண்டுள்ள மிகப் பெரிய பிரதேசமாகும். உலகின் 60 சதவீதமான பொருளாதார செயற்பாடுகளும் 50 சதவீத வர்த்தக செயற்பாடுகளும் இடம்பெறும் பிராந்தியமாக இது காணப்படுகிறது.

இப்பிராந்தியம் உலக வரைபடத்தில் கேந்திர முக்கியத்துவ அமைவிடத்தைக் கொண்டுள்ளது. அண்மைய ஆண்டுகளில், ஆசிய - பசுபிக் பிராந்திய அபிவிருத்தி மக்களின் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. உலகின் மிகப் பலமான இயங்குநிலைப் பிராந்தியமாகவும் இது காணப்படுகிறது.

அனைத்துத் தரப்பினரும் இப்பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இங்கு முதலீடுகளை மேற்கொண்டுள்ளனர். அனைத்துலக சமூகத்துடனான உறவுநிலை வடிவமானது ஆசிய-பசுபிக் பிராந்திய நிலைப்பாட்டிற்கேற்ப மாற்றமுற்றுள்ளது.

### ஐந்து கோட்பாடுகள்

இப்பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் நிலைத்தன்மையை அதிகரிப்பதில் சீனா தன்னை அர்ப்பணித்துள்ளதாக கூறியுள்ளது. அத்துடன் சமாதான சகவாழ்வின் ஐந்து கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அனைத்து நாடுகளுடனும் சீனா சமாதான அபிவிருத்தி மற்றும் பரஸ்பர நலன் பயக்கும் மூலோபாயம் போன்றவற்றைக் கட்டியெழுப்பி வருகிறது. பிராந்திய ஒருமைப்பாட்டிலும் இது பங்களிப்பை வழங்கியுள்ளது.

பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற பாதுகாப்பு சவால்களுக்கு பதிலளித்தல், நிலையான சமாதானத்திற்கு பங்களிப்பை வழங்குதல், ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் பொதுவான செழுமை போன்றவற்றுக்காக சீனா பல்வேறு பயனுள்ள நகர்வுகளை முன்னெடுத்து வருவதாகவும் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது, ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் சூழலானது முற்றிலும் ஸ்திரமானதாகக் காணப்படுகிறது. இங்கு சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பலமான இயங்குவிசை காணப்படுகிறது. இது பூகோள தரையம்சத்தில் முக்கியதொரு பங்காகக் காணப்படுகிறது.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் முக்கியமான உறுப்பு நாடு என்ற வகையில், சீனா இப்பிராந்தியத்தின் எதிர்காலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள தனது சமாதான அபிவிருத்தி தொடர்பில் முழுமையாகக் கவனம் செலுத்தியுள்ளது. சீனா தனது சொந்தப் பொறுப்பில் பிராந்திய செழுமை மற்றும் நிலைத்தன்மையை முன்னேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பு போன்றவற்றின் ஊடாக பிராந்திய நாடுகளுடன் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு சீனா தயாராக உள்ளதாகக் கூறியுள்ளது.

### பாதுகாப்பு விடயத்திலும் கூடிய கரிசனை

'முதலாவதாக, நாங்கள் பொதுவான அபிவிருத்தியை அதிகரிக்க வேண்டும். அத்துடன் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான உறுதியான பொருளாதாரத் தளத்தை இடவேண்டும். பொருளாதார நலன்களை அதிகரிப்பதானது நாடுகளுக்கு இடையிலான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமாக அமைகிறது.

அத்துடன் பல்வேறு பாதுகாப்பு விவகாரங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருளாதார ஒத்துழைப்பில் கணிசமானளவு சாதனைகள் எட்டப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில், பொருளாதார ஒத்துழைப்பை மேலும் துரிதப்படுத்துவதுடன், இப்பிராந்தியத்தில் சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்க வேண்டும். இதற்கும் மேலாக, முழுமையான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான தொடர்பையும் பேண வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிகழ்ச்சி நிரலை நிலையான அபிவிருத்தி என வரையறுக்கும் விதமாக நாம் அதனை அமுல்படுத்த வேண்டும். இதன் மூலம் நாடுகளுக்கு இடையிலான குறுகிய அபிவிருத்தி இடைவெளியை நீக்க முடியும். ஆகவே அனைத்து நாடுகள் மற்றும் அனைத்து சமூக மட்ட மக்களும் அபிவிருத்தியின் பங்கிலாபங்களை அனுபவிக்க முடியும். இதன்மூலம் நாடுகளின் நலன்கள் மேலும் நெருக்கமானதாக மாறிவிடும்' என சீன அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட கொள்கை விளக்கவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருதரப்பு நலன் பயக்கும் அனைத்துலக உறவுகள் தொடர்பான புதிய மாதிரி ஒன்று கட்டியெழுப்பப்பட வேண்டும் எனவும் சீனா அழைப்பு விடுத்துள்ளது. மோதல் மற்றும் முரண்பாடுகள் அற்ற மற்றும் பரஸ்பர நலன் பயக்கும் ஒத்துழைப்புப் போன்றவற்றைக் கட்டியெழுப்பும் விதமாக உலகின் அதிகாரத்துவம் மிக்க நாடுகளுடன் உறவுகள் தொடர்பில் புதியதொரு மாதிரியைக் கட்டியெழுப்புவதற்கு சீனா அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற ஆர்வங் கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

சீனா தனது முழுமையான மூலோபாய ஒத்துழைப்புக் கூட்டுப் பங்களிப்பை மேலும் ஆழமாக்குவதற்காக ரஷ்யாவுடனும், மிக நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக இந்தியாவுடனும் இணைந்து பணியாற்றுவது தொடர்பாகவும் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் ஜப்பானுடனான தனது உறவை முன்னேற்றுவதிலும் சீனா விருப்பங் கொண்டுள்ளது.

### அமெரிக்கவுடன் இணைந்து பணியாற்ற சீனா விருப்பம்

அமெரிக்காவின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதிலும் சீனா தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதன்மூலம் இவ்விரு நாடுகளின் உறவுநிலையை வலுப்படுத்துவதுடன், முரண்பாடற்ற, மோதலற்ற, பரஸ்பர மதிப்பு மற்றும் பரஸ்பர நலன் பயக்கும் ஒத்துழைப்பு, இருதரப்பு, பிராந்திய, பூகோள விவகாரங்கள் மீதான ஒத்துழைப்பை அதிகரித்தல், பிரிவினைகளைக் கட்டுப்படுத்துதல், புதியதொரு ஆரம்ப முனையிலிருந்து மீண்டும் இருதரப்பு உறவைக் கட்டியெழுப்புதல், இதன் மூலம் இவ்விரு நாடுகளைச் சேர்ந்த மக்களும் உலகெங்கும் வாழும் மக்களும் நலன்களைப் பெறுதல் போன்ற பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்காவின் புதிய நிர்வாகத்துடன் சீனா பணியாற்றுவதற்கான தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளது.

சீன நாட்டை அபரிமிதமான வகையில் புதுப்பிக்கும் சீனாவின் கனவை உணர்த்துவதற்காக சீன மக்கள் மிகக் கடுமையாகப்பணியாற்றுகிறார்கள் என சீன அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பிற்கான பெரும் வாய்ப்புக்களை சீனா கொண்டு வரும். சீனாவின் அபிவிருத்தி இந்த உலகின் சமாதானத்திற்கான ஒரு நினைவுச் சின்னமாக அமையும். அயல்நாடுகளுடன் நட்பைக் கட்டியெழுப்புதல் மற்றும் கூட்டுப்பங்களிப்பை உருவாக்குதல் போன்றவற்றுக்காக சீனா உறுதியாக உழைக்கும். இதன்மூலம் சீனா சுமுகமான, பாதுகாப்பான, செழுமைமிக்க அயல்நாடுகளைக் கட்டியெழுப்பும்.

இப்பிராந்தியத்தைச் சேர்ந்த அனைத்து நாடுகளுடனும் பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்கி, பாதுகாப்பு சார் உறுதியான மேலதிக கலந்துரையாடல்கள் மற்றும் ஒத்துழைப்பையும் உருவாக்கி, இந்தப் பிராந்தியத்தின் பிரகாசமான எதிர்காலத்திற்காக அனைத்துலக உறவுகள் தொடர்பான புதியதொரு மாதிரியையும் கட்டியெழுப்புவது தொடர்பில் அனைத்து நாடுகளுடனும் பணியாற்றுவதற்கு சீனா தயாராக உள்ளது என சீனாவால் வெளியிடப்பட்ட கொள்கை விளக்கவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்றி: புதினப்பலகை




# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 68

பொன்.வேணு கிருஷ்ணா

### மருமகனை முக்கிய பதவியில் நியமித்தார் ட்ரம்ப்

அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட் ரொனால்ட் ட்ரம்ப், தனது மகளின் கணவரான ஜேரட் குஷ்னரை அமெரிக்க அதிபர் மாளிகையான வெள்ளை மாளிகையின் மூத்த ஆலோசகர்களில் ஒருவராக நியமித்துள்ளார்.



### தன் நடத்தையை விமர்சித்த ஹொலிவூட் நடிகையை டுவிட்டரில் சாடிய ரொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்க அதிபராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட ரொனால்ட் ட்ரம்ப், தன்னுடைய நடத்தை குறித்து விமர்சித்த ஹொலிவூட் நடிகை மெரில் ஸ்ட்ரீப்புக்கு சீற்றத்துடன் பதிலளித்துள்ளார்.

லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற கோல்டன் குளோப் விருதுகள் வழங்கும் விழாவில் பேசிய ஸ்ட்ரீப், அமெரிக்க அதி பராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரொனால்ட் ட்ரம்ப், பிரசாரம் ஒன்றின்போது மாற்றுத் திறனாளி செய்தியாளர் ஒருவரை வெளிப்படையாகக் கேலி செய்த மையைப் பார்த்து தான் அதிர்ச்சி அடைந்தார் எனக் கூறினார்.

35 வயதாகும் ஜேரட் குஷ்னர் அண்மையில் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தல் பிரசாரத்தில் முக்கிய பங்கு வகித்தார்.

வெள்ளை மாளிகையின் மூத்த ஆலோசகராகப் பொறுப்பேற்கவுள்ள இவர், அமெரிக்காவின் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுக் கொள்கைகள் தொடர்பான அம்சங்களைக் கவனிப்பார்.

ட்ரம்பின் மகளான இவான்கா, ட்ரம்பை திருமணம் செய்துள்ள குஷ்னர், ஒரு சொத்து மேம்பாட்டாளராக உள்ளார்.

குடும்பத்தினருக்குப் பாரபட்சமாக பதவி வழங்குவதற்கு எதிரான சட்டங்களையும், மோதல்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்களையும் சுட்டிக்காட்டி ட்ரம்பின் இந்த நியமனத்தை அவர் உடனடியாகப் பரிசீலிக்க வேண்டுமென ஜனநாயகக் கட்சியினர் கேட்டுக் கொண்டிருந்தனர்.

முன்னதாக, தனது மருமகனை ஒரு மிகப்பெரிய சொத்து என்று புகழ்ந்துள்ள ரொனால்ட் ட்ரம்ப், நிர்வாகத்தில் தலைமைப் பண்புமிக்க ஒரு முக்கிய பொறுப்பை அவருக்கு அளிப்பதில் தான் பெருமையடைகிறார் எனத் தெரிவித்திருந்தார்.


நடிகை மெரில் ஸ்ட்ரீப் மெரில் ஸ்ட்ரீப்

மேலும், அதிகாரத்தில் இருப் பவர்கள் தங்கள் அந்தஸ்தைப் பயன்படுத்தி மக்களை அவ மானப்படுத்தும்போது பலரும் பாதிக்கப்படுவார்கள். - என்றார்.

இதற்கு ருவிட்டரில் பதி லளித்த ட்ரம்ப், ஹொலிவூட்டில் உள்ள மிகவும் அதிக மதிப்பீடு செய்து கொள்ளும் நடிகைகளில் ஸ்ட்ரீப்பும் ஒருவர் என்று கூறியிருக்கிறார்.

செய்தியாளரை கேலி செய்யவில்லை எனவும், அவர் செய்தியை மாற்றி எழுதியமையை நடித்துக் காட்டினார் எனவும் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

### ரொனால்ட் ட்ரம்பால் பதவி இழந்த மெக்சிகோ அமைச்சருக்கு மீண்டும் அமைச்சர் பதவி


மீண்டும் அமைச்சராகியுள்ள லூயிஸ் வீடகாரே

கடந்த ஆண்டு மெக்சிகோவுக்கு ரொனால்ட்ட்ரம்ப் வருகை புரிந்தபோது, அவரின் பயண ஏற்பாடுகளைச் செய்தமை தொடர்பாகப் பதவி இழந்த அந்நாட்டின் முன்னாள் நிதி அமைச்சரான லூயிஸ் வீடகாரேவுக்கு மீண்டும் அமைச்சர் பதவி கிட்டியுள்ளது.

மெக்சிகோவின் புதிய வெளி யுறவு அமைச்சராக ஆகியுள்ள லூயிஸ் வீடகாரே, அமெரிக்கா-மெக்சிகோ எல்லையில் கட்டடப்பட உத்தேசித்துள்ள சுவர் உட்பட அமெரிக்கா மற்றும் மெக்சிகோ ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகளை அமெரிக்காவின் புதிதாகப் பதவியேற்கவுள்ள ட்ரம்ப் நிர்வாகத்துடன் மெக்சிகோ நடத்தும் பேச்சுகளில் தலைமையேற்பார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் லூயிஸ் வீடகாரே பதவி விலக நேர்ந்தமைக்கு, ரொனால்ட் ட்ரம்ப் தனது ருவிட்டரில் வருத்தம் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவில் உள்ள மெக்சிகோ குடியேறிகளை குற்றவாளிகள் என்றும், பாலியல் வல்லுறவு செய்பவர்கள் என்றும் ரொனால்ட் ட்ரம்ப் விமர்த்திருந்தார். அவர் மெக்சிகோவுக்கு வருகை புரிந்த போது, ஏற்பாடுகளை செய்தது தொடர்பாக லூயிஸ் வீடகாரே கடும் விமர்சனங்களைச் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்காவில் செவலர்லே கார்களுக்கு வரி விலக்கா? ரொனால்ட் ட்ரம்ப் கோபம்





மெக்சிகோவில் தயாரிக்கப்படும் கார்கள் அமெரிக்காவில் வரியில்லாமல் விற்கப்படு கின்றமைக்கு ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தை அமெரிக்க அதிபராகும் ரொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

அத்தகைய வாகனங்களுக் குப் பெருமளவிலான எல்லை வரி விதிக்கப்பட வேண்டும் என ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள ஜெனரல் மோட்டார்ஸ், அமெரிக்காவில் விற்கப்படும் செவர்லே குரூஸ் செடான் ரக கார்கள், ஓஹையோ மாநிலத்தில் தயாரிக்கப்பட்டவை எனத் தெரிவித்துள்ளது.

உலகச் சந்தையில் விற்கப்படும் கார்கள்தான் மெக்சிகோவில் தயாரிக்கப்படுகின்றன என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

### ‘‘இது நடக்காது’ : வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல் குறித்து ட்ரம்ப் நம்பிக்கை



அமெரிக்கா மீது அணு ஆயு தத் தாக்குதலை நடத்தத் திறன்மிக்க ஏவுகணையொன்றைத் தான் தயாரித்து வருகிறார் என வெளியிடப்பட்ட வடகொரியாவின் அண்மைய கூற்றை, அமெரிக்க அதிபராகும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ரொனால்ட் ட்ரம்ப் புறந்தள்ளியுள்ளார்.

வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் விடுத்த புத்தாண்டு செய்தியில், சக்தி வாய்ந்த இந்த ஏவுகணையை நிறுவுவது கடை சிக் கட்டத்தை எட்டி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதில் ஒரு தற்புகழ்ச்சி உள்ளதாக ரொனால்ட் ட்ரம்ப் தான் வெளியிட்ட ஒரு ருவிட்டர் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

‘‘இது நடக்காது’’, என்று ட்ரம்ப் தனது ருவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் ஆணு ஆயுதத் திறன் மீது தனது சந்தே கங்களை ட்ரம்ப் வெளிப் படுத்துகிறாரா அல்லது இது குறித்த தடுப்பு நடவடிக்கை யைத் திட்டமிடுகிறாரா என்று `தெளிவாகத் தெரியவில்லை.

### காலநிலை மாற்ற கொள்கையின் எதிர்ப்பாளர் அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகாமை யின் தலைமைப் பதவிக்குத் தேர்வு


அமெரிக்க அதிபர் ஒபாமாவின் காலநிலை மாற்றம் தொடர்பான கொள்கைகளுக்கு பகிரங்கமாக எதிர்ப்புக் குரல் எழுப்பிய ஒருவரை, நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகாமையின் தலைமைப் பதவிக்கு அமெரிக்க அதி பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுத்துள்ளார்.

எண்ணெய் வளம் மிக்க ஓக்லஹோமா மாநிலத்தின் முதன்மை அரச வழக்கறிஞரும், புதைபடிவ எரிபொருள் துறையின் நெருங்கிய கூட்டாளியாகப் பார்க்கப்படும் ஸ்காட் ப்ரூயிட், காலநிலை மாற்றம் தொடர்பான கொள்கையில் நம்பிக்கையற்றவர் ஆவார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வேட்பாளராக ஜனநாயகக் கட்சியின் நியமனத்தைப் பெறப் போட்டியிட்ட பெர்னி சாண்டர்ஸ், குறைவாகப் பயன் படுத்த வேண்டிய புதை படிவ எரிபொருளை அமெரிக்கா அதிகமாகப் பயன்படுத்துவதற்கே ஸ்காட் ப்ரூயிட் பணியாற்றியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகாமையின் தலைமைப் பதவிக்கு ட்ரம்பின் தேர்வு மிகவும் வருத்தமளிப்பதாகவும், நாட்டுக்கு ஆபத்து விளைவிப்பதாகவும் அமைந்துள்ளதாக பெர்னி சாண்டர்ஸ் விவரித்துள்ளார்.

(கேள்வி தொடரும்...)



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.





# தமிழ்த் தேசிய எழுச்சி


33

## ஈழத் தேசிய விடுதலை முன்னணி

1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாள் சென்னை நகரிலுள்ள விடுதி ஒன்றில் ஈழத் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களுக்கும் பிரபாகரனுக்கும் மத்தியிலான சந்திப்பு நிகழ்ந்தது. இந்தச் சந்திப்பில் நான் பிரபாகரனுடன் கலந்துகொண்டேன். மாணவர் பேரவைப் போராட்ட காலத்திலிருந்தே ரெலோ தலைவர் சிறீ சபாரெத்தினத்தை பிரபாகரன் நன்கறிவார். ஈரோஸ் தலைவர் பாலகுமாரையும் பிரபாகரனுக்கு நன்கு தெரியும். சென்னை இந்திரா நகரில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமைச் செயலகத்துக்குப் பல தடவைகள் வருகை தந்த பாலகுமார், பிரபாகரனையும் என்னையும் சந்தித்துப் பேசியிருக்கிறார். ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் பத்மநாபாவை அன்றுதான் முதற்தடவையாகப் பிரபாகரன் சந்தித்தார்.

கூட்டத்தில் பரஸ்பர நல்லுறவும் நல்லெண்ணமும் நிலவியது. கூட்டான செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுப்பதன் அவசியம் குறித்து நான்கு தலைவர்கள் மத்தியிலும் கருத்தொற்றுமை நிலவியது. தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழர் தாயகத்தின் சுதந்திரத்துக்காகப் போராடுவது என்ற பொது அரசியல் இலட்சியத்தை நான்கு அமைப்புகளும் வரித்துக் கொண்டன. கூட்டு இராணுவத் திட்டம், கூட்டுறவான நடவடிக்கையின் அடிப்படையில் படிப்படியாகக் காலப் போக்கில் பரிணாமம் பெறவேண்டும் என பிரபாகரன் விளக்கிக் கூறினார். அதுவரை காலமும் தனிப்பட்ட முறையில் ஒவ்வோர் அமைப்பும் சிங்கள ஆயுதப் படைகளுக்கு எதிராகத் தாக்குதல்களை நிகழ்த்த வேண்டும் எனவும் முடிவாகியது. சமாதானப் பேச்சு முயற்சியை நோக்கி இந்திய இராஜதந்திர நகர்வுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றமையால், நான்கு அமைப்புகளின் தலைவர்களும் அடிக்கடி சந்தித்து அரசியல் சூழ்நிலை வளர்ச்சிப் போக்குக் குறித்து கலந்துரையாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக, தமிழர் தேசத்தின் அரசியல் சுதந்திரத்துக்காக ஒன்றிணைந்து போராடுவதென உறுதிப் பிரமாணம் செய்து கூட்டு மகஜர் ஒன்றில் நான்கு தலைவர்களும் கைச்சாத்திட்டனர்.

ஈழத் தேசிய விடுதலை முன்னணியுடன் இணைந்து செயற்பட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவு எடுத்த அதே நாளிலிருந்து தமிழீழ தேசத்தில் வன்முறைத் தாக்குதல்கள் காட்டுத் தீ போலப் பரவின. 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் நாள் இரவு 10 மணியளவில் யாழ்ப்பாணக் கோட்டை இராணுவ முகாமுக்குச் சமீபமாக அமைந்திருந்த காவல்துறைத் தலைமைச் செயலகம் விடுதலைப் புலிக் கெரில்லா வீரர்களின் பாரிய தாக்குதலுக்கு இலக்காகியது. அவ்வேளை, யாழ்ப்பாண மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்றிருந்த கேணல் கிட்டு, இத்தாக்குதலுக்குத் தலைமை தாங்கினார். காவல் நிலையம் முன்பாகக் கேந்திர முனைகளில் வியூகம் அமைத்து, நிலையெடுத்த புலி வீரர்கள் மோட்டார்கள் ரொக்கெட் ஏவுகணைகளால் காவல்துறைக் கட்டடம் மீது உக்கிரமான தாக்குதல்களை நிகழ்த்தினார்கள். புலிகளின் குண்டு மழைக்கு நின்று பிடிக்க முடியாத காவல்துறையினர், இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் விட்டுவிட்டு அருகிலுள்ள கோட்டை இராணுவ முகாமுக்கு ஓடிச்சென்று அங்கு தஞ்சம் புகுந்தனர். கோட்டை முகாமிலிருந்து சண்டை நிகழ்ந்த இடத்துக்கு விரைந்து வந்த இராணுவப் படையணி மீது புலி வீரர்கள் தாக்குதலைத் தொடுத்தனர். புலிகளின் உக்கிர தாக்குதலைச் சமாளிக்க முடியாத இராணுவத்தினரும் சிதறியோடிக் கோட்டைக்குள் பதுங்கினர். காவல்துறைத் தலைமைச் செயலகம், உதவிப் பொலிஸ் மாஅதிபரின் காரியாலயம் உட்பட பல்கூட்டுக் காவல்துறைக் கட்டடங்கள் முற்றாகத் தாக்கப்பட்டன. பெருந்தொகையான ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றிய பின்பு மறுநாட் காலை விடிவதற்குள் புலி வீரர்கள் அங்கிருந்து மறைந்தனர்.



யாழ்ப்பாணக் காவல்துறைத் தலைமைச் செயலகம் தாக்கி அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகித்த விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏனைய அமைப்புகளும் தனித் தனியாக இராணுவ நிலைகள், காவல் நிலையங்கள், இராணுவத் தொடர் வண்டிகள் போன்றன மீது கெரில்லாத் தாக்குதல்களை நிகழ்த்தி, சிங்கள ஆயுதப் படைகள் மீது பெரும் உயிர்ச்சேதத்தை விளைவித்தன. 1985 ஏப்ரல், மே காலப் பகுதியில் தமிழ்ப் போராளி அமைப்புகளின் வன்முறைத் தாக்குதல்கள் உச்சக் கட்டத்தை அடைந்தன எனலாம். இக்கால கட்டத்தில் தலைவிரித்தாடிய வன்முறைத் தாக்குதல்களை ஒரு இந்திய எழுத்தாளர் கீழ்க் கண்டவாறு விவரித்திருக்கிறார்.

''தமிழ்ப் பகுதிகளில் சுழற்சியாக மாறிமாறிக் கட்டவிழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் திகிலூட்டுவனவாக இருந்தன. காற்றில் நடுங்கும் காட்டரசம் இலைபோல இலங்கை அதிர்ந்தது.

ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் விடுதலைப் புலிகள் இயக்கம் இணைந்து கொண்டமையை அடுத்து கூட்டணிக்கு வெளியே நின்ற புளொட் உட்பட சகல தீவிரவாதப் போராளி அமைப்புகளும் புதிய உத்வேகம் பெற்றுச் செயற்படத் தொடங்கின. கொழும்பு அரசைப் பணியவைக்கும் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது போன்று வடகிழக்கின் மூலை முடுக்குகள் எங்கும் இவ்வமைப்புகள் சிறீலங்கா படைகளுக்கு எதிராகத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தின''.

தமிழ் விடுதலை அமைப்புகளின் கெரில்லாப் போராட்டம் உக்கிரமடைந்து சிங்கள ஆயுதப் படைகளுக்கு பேரழிவை ஏற்படுத்தி வந்த அதே வேளை, இந்திய வெளியுறவுச் செயலர் ரொமேஸ் பண்டாரி கொழும்புக்கு அடிக்கடி வருகை தந்து போர் நிறுத்தம், பேச்சுப் பற்றி ஜெயவர்த்தனா அரசுடன் கலந்துரையாடல்களை நிகழ்த்தினார். தமிழர் தரப்பில் இருந்து அதிகரித்து வந்த இராணுவ நெருக்கத்துக்கு முகம் கொடுக்க முடியாது அங்கலாய்த்த ஜெயவர்த்தனா, இந்தியாவின் யோசனைக்கு இணங்கினார். தமிழ்ப் போராளி அமைப்புகளுடன் பேசுவதற்கு இணங்கிய ஜெயவர்த்தனா, அதற்கு ஒரு நிபந் தனையையும் விதித்தார். அதாவது, தமிழ் விடுதலைப் போராளி அமைப்புகளுக்கு வழங்கி வந்த சகல இராணுவ உதவிகளையும் இந்திய அரசு நிரந்தரமாக நிறுத்திவிட வேண்டும் என்றும், தமிழீழத் தனியரசுக் கோரிக்கையைக் கைவிடுமாறும் தமிழ் அமைப்புகளை நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் ஒரு கண்டிப்பான நிபந்தனையை விதித்தார். இந்த நிபந்தனையை நிறைவு செய்வதாக இந்திய அரசு உறுதியளித்ததை அடுத்து போர்நிறுத்தம் செய்வதற்கு ஜெயவர்த்தனா இணங்கினார். போருக்கு ஓய்வுகொடுப்பதும் பேச்சுகளை ஆரம்பிப்பதற்குமான நாள்களும் நிர்ணயிக்கப்பட்டன. தமிழ் விடுதலை இயக்கங்களுக்கும் சிறீலங்கா அரசுக்கும் மத்தியில் 1985 ஜூன் நடுப்பகுதியில் போர்நிறுத் தத்தை செயற்படுத்துவது என்றும் இந்திய அரசின் மத்தியஸ்துவத்தின் கீழ் மூன்றாம் நாடானஇமாலய இராச் சியமான பூட்டானில் ஜூலை நடுப்பகுதியில் பேச்சுக்களைத் தொடங்குவது எனவும் முடிவு எடுக்கப்பட்டது

> ஜெயவர்த்தனாவின் கபட நோக்கம் குறித்து ஆழமான சந்தேகம் கொண்டிருந்த பிரபாகரனுக்கும் ஏனைய போராளி அமைப்புகளின் தலைவர்களுக்கும் திடீரெனப் போர்நிறுத்தம் செய்துகொள்வது சரியான அணுகுமுறையாகத் தென்படவில்லை. சிங்கள ஆயுதப் படைகள் மீதான இராணுவ அழுத்தத்தைத் திடீரென நிறுத்திக் கொள்வது அரச படைகளுக்கே அனுகூலமானதாக அமையுமெனப் பிரபாகரன் கருதினார்.

ஜெயவர்த்தனாவின் கபட நோக்கம் குறித்து ஆழமான சந்தேகம் கொண்டிருந்த பிரபாகரனுக்கும் ஏனைய போராளி அமைப்புகளின் தலைவர்களுக்கும் திடீரெனப் போர்நிறுத்தம் செய்துகொள்வது சரியான அணுகுமுறையாகத் தென்படவில்லை. சிங்கள ஆயுதப் படைகள் மீதான இராணுவ அழுத்தத்தைத் திடீரென நிறுத்திக் கொள்வது அரச படைகளுக்கே அனுகூலமானதாக அமையுமெனப் பிரபாகரன் கருதினார். படிப்படியாகத் தீவிரமடைந்து விரிவாக்கம் கண்டுவந்த கெரில்லாப் போரை, அதன் கேந்திர நோக்கை அடைவதற்கு முன்பாக, அதாவது சிங்கள இராணுவ இயந்திரத்தை வலுவிழக்கச் செய்வதற்கு முன்னராக போருக்கு ஓய்வுகொடுப்பது என்பது போரியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் சிங்கள அரசுக்கே சாதகமானதாக முடியுமெனப் பிரபாகரன் எண்ணினார். தமிழ்ப் போராளி அமைப்புகளின், குறிப்பாகப் பிரமாதமான போரியல் சாதனைகளைப் படைத்துவந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்ட இலச்சியத்துக்கு இது பங்கம் விளைவிப்பதாக அமையுமெனவும் அவர் கருதினார். ஜூன் மாதம் ஆரம்பத்தில், றோ புலனாய்வுத் துறை உயர் அதிகாரியான சந்திரசேகரனை பிரபாகரனும் ஏனைய ஈழத் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களும் சந்தித்தனர். அதன்போது அவர்கள் தமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் மனம் திறந்து வெளிப்படையாகத் தெரிவித்தனர். திடீரெனப் போருக்கு ஓய்வுகொடுத்தால், சிங்கள ஆயுதப் படைகள் தம்மைப் பலப் படுத்தி, தமது போரியல் சக்தியை வலுப்படுத்த வழிசமைத்துக் கொடுப்பதாக அமையுமெனவும், அதேவேளை, தமிழ் கொரில்லாப் படையணிகள் செயற்பாடு இன்றி ஊக்கமிழந்து மனத்தளர்வுக்கு ஆளாவார்கள் எனவும் சந்திரசேகரனுக்கு பிரபாகரன் எடுத்து விளக்கினார்.

(தொடரும்...)

## பதுளையில் 103 பேர் டெங்கால் பாதிப்பு

பதுளை, ஜன.21

பதுளை மாவட்டத்தில்கடந்த முதலாம் திகதியில் இருந்து 18 ஆம் திகதி வரை, 103 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப் பட்டுள்ளனர் என இனங்காணப் பட்டுள்ளனர் என்று பதுளை மாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஜனிதா தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அவர்களில் 65 பேர் பதுளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் கூறினார். அந்தப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு வேலைத் திட்டம் ஒன்றை சுகாதாரப் பணி மனை முன்னெடுக்கவுள்ளதாகவும் டெங்கு நுளம்பு பரவும்வகையில் சூழலை வைத்திருப் பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கையை அது எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (எ)

## கருக்கலைப்புக்கான சட்ட அனுமதி; விசேட சந்தர்ப்பங்களில் மட்டுமே!

### நிதி அமைச்சின் யோசனையை அடுத்து

கொழும்பு, ஜன.21

இலங்கையில் கருக் கலைப் புக்கு அனுமதி வழங்கும் சட்டம் ஒன்றுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனினும் விசேட சந்தர்ப் பங்களில் இவ்வாறு கருக் கலைப்புச் செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாலியல் வன்கொடுமைகளால் ஏற்படும் கருக்கள், சிறு வயதுக் கர்ப்பங்கள், பிரசவத்தால் பெரிய ஆபத்து ஏற்படக் கூடிய நிலைமைகள் போன்ற சந்தர்ப்பங்களின் போது அவ் வாறான கருவைக் கலைப்பதற்கு விசேட அனுமதி வழங் கப்படும்வகையில் சட்ட ஏற்பாடு செய்யப்பட உள்ளன. நீதி அமைச்சால் இந்தச் சட்ட யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதன் மூலம் கருக்கலைப்புக்கு அனுமதி வழங்கப்பட முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கையில் கருக் கலைப்புச் செய்துகொள்வது சட்டவிரோதமானது என்பதுடன், குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றச்செயலாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், சட்டவிரோத கருக் கலைப்புக்களால் அதிகளவு மரணங்கள் பதிவாகின்றன என்று ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. (தி)

## தினசரி ராசி பலன் 21.01.2017

துர்முகிவருஷம் தைமாதம் 8 ஆம் நாள் சனிக்கிழமை நவமி இரவு 7.26 வரை பின் தசமி, சுவாதி காலை 8.03 வரை. பின்னர் விசாகம். அமிர்தசித்தயோகம் முழுவதும். ராகுகாலம் பகல் 9.27 முதல் 10.54 வரை. சுபநேரம் மாலை 3.36 முதல் 5.06 வரை. திவசம் செய்ய வேண்டிய திதி : தை மாத தேய்பிறை நவமி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வேலைச் சுமை, அலைச்சல் அதிகரிக்கும். எவரை நம்பியும் பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். தேகம் பாதிப்படையும். எதிர்பார்த்தவை தாமதமாக முடியும். வியாபாரத்தில் லாபம் குறையும்.

**ரிஷபம்:** இன்று இன்பமான நாளாகும். திடீர்ப் பணவரவுகள் வந்து மகிழ்ச்சியில் ஆழ்த்தும். குடும்பத் தில் குதூகலம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். பகையாய் இருந்தவர்கள் நட்புடன் பழகுவார்கள்.

**மிதுனம்:** இன்று ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. புதுவேலை கிடைக்கும். வழக்கில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தர்களின் கோரிக்கை மேலிடத்தால் ஏற்கப்படும். வியாபாரம் அபரிமிதமாக வளர்ச்சி பெறும்.

**கடகம்** : இன்று யோசனையான நாளாகும். பணத்தட்டுப்பாடு இருக்கும். எடுக்கும் புதிய முயற்சிகள் தாமதமாகும். நண்பர்கள், உறவினர்களின் உதவி குறையும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் இழுபறியில் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும்.

**சிம்மம்** : இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். தொழிலில் அலைச்சல்கள் அதிகரிக்கும். குடும்ப அமைதி பேணப்படும். எடுக்கும் எந்த முயற்சியும் தாமதமாகும். நண்பர்கள் ஓரளவு உதவுவார்கள்

**கன்னி:** இன்று சுபீட்சமான நாளாகும். சமூகத்தில் இவர்கள் புகழ் உயரும். பூர்வீக சொத்துகள் வந்து சேரும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் வருகையால் வருமானம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் விரும்பிய பதவி உயர்வு கிடைக்கும்.

**துலாம்:** இன்று மேன்மையான நாள் பணப்புழக்கம் சரளமாக இருக்கும். மனதில் துணிவு, தன்னம்பிக்கை அதிகரிக்கும். விட்டுப்போன சொந்தங்கள் வலிய வருவார்கள். வியாபாரம் நன்கு மேன்மை அடையும். உத்தியோகத்தர்களுக்கு உயர்ச்சிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** இன்று கவலை நிறைந்த நாள் ஆகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகம் காட்டுவார்கள். சிலர் செய்யும் தொழிலை இழக்க நேரிடும்.

**தனுசு:** இன்று அனுகூலமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். அரசாங்க வேலைக்காக எடுத்த முயற்சிகள் அனுகூலமாகும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் அமையும். வீட்டில் சுபகாரியம் நடக்கும்.

**மகரம்:** இன்று விருத்தியான நாள். புதிய முற்சிகள் வெற்றி பெறும். புதுவேலை கிடைக்கும். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். விலகிச் சென்ற உறவுகள் மீண்டும் ஒன்று சேரவாய்ப்புள்ளது. மாணவர் கல்வியில் விருத்தி அடைவார்கள்.

**கும்பம்:** இன்று உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. தொழிலில் கௌரவ பதவிகள் கிடைக்கும். பெரிய மகான்களின் தரிசனம், ஆசி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேம்படைவார்கள்.

**மீனம்:** இன்று துயரமான நாளாகும். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் பிரச்சினைகள் தலை தூக்கும். வியாரத்தில் நட்டமுண்டாகும். நெருங்கிய உறவினரின் துக்கசெய்தி கிடைக்கும். மாணவர்கள் தேர்வில் தோல்வி அடைவார்கள்.

சந்திராட்டம நாள்: பூரட்டாதி 4ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஜனித்தோர் முக்கிய நற்கருமங்களை தவிர்த்தல் வேண்டும்.

## மலையக ஆலயங்களில் மழைவேண்டி நீராபிஷேகம்



நுவரெலியா, ஜன.21

வறட்சிக் காலநிலை நீங்கி மழைவேண்டி மலைய கத்தில் உள்ள ஆலயங்களில் தண்ணீர் ஊற்றி பூஜை வழிபாடுகளில் பொது மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலை லிந்துலை டில் குற்றிதோட்ட முத்து மாரியம்மன் ஆலயச் சுற்று வட்டாரங்களுக்கும் சுவாமி விக்கிரகங்களுக்கும் நேற்றுமுன்தினம் நீராபிஷேகம் செய்யப்பட்டது. இதில் லிந்துலை தோட்ட மக்கள் தண்ணீர் ஊற்றி அபிஷேகம் செய்தனர். (எ)

## புதையல் தோண்டிய 6 பேர் கைது!

தொப்பிகல், தம்மின்ன வீதியில் உள்ள வலமண்டிய இராணுவ முகாமுக்கு அருகில் இருக்கும் புராதன இடம் ஒன்றில் புதையல் தோண்டிய இரண்டு இராணுவத்தினர் உட்பட 6 பேரை அரலகங்வில பொலி ஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

வலமண்டிய இராணுவ முகாமில் கடமையாற்றும் 2 இராணுவத்தினரும் தெய்யத்தகண்டிய, மாவனாவேல பிரதேசத்தைச் சேர்ந்த 4 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து நீர் இறைக்கும் இயந்திரம், மண் வெட்டி, அலவாங்கு மற்றும் பூஜை பொருள்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

## அமெரிக்கத் தூதரகம் ஜெருஸலேமுக்கு; ட்ரம்பின் நடவழிக்கையை எதிர்ப்போம்

### ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம்களிடம் வேண்டுகோள்



கொழும்பு, ஜன.21

இஸ்ரேலில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தை, புனித பூமியான ஜெருஸலேமுக்கு மாற்ற அந்த நாட்டின் புதிய ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் மேற்கொள்ளும் முயற்சிக்கு, இலங்கை முஸ்லிம்கள் தமது எதிர்ப்பை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்த வேண்டும் என்று புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேவேளை, இந்த விடயம் தொடர்பாக சிவில் அமைப்புக்கள், இயக்கங்கள் தமது நிலைப்பாட்டை இலங்கையில் அமைந்துள்ள அமெரிக்க தூத ரகத்துக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் தமது எதிர்ப்பைவெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் கூறியுள்ளவை வருமாறு:

பலஸ்தீன மக்கள் கடந்த காலங்களில் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளின் போதும் இலங்கை முஸ்லிம்கள் அது தொடர்பில் விழிப்புணர் வுடன் இருந்து அதற்கு எதிராகக் குரல் எழுப்பியிருந்தனர். அந்த வகையில், தற்போது அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ரொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேலில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தைப் புனித பூமியான ஜெருஸ லேமுக்கு மாற்றத் திட்டமிட்டுள்ளமையுடன் அதற்கான முயற்சிகளை சர்வதேசத்தின் எதிர்ப்பை மீறி அவர் மேற்கொண்டு வருகின்றார்.

உலக முஸ்லிம்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது குறித்து இலங்கை முஸ்லிம்கள் கவனமாகவும், நிதானமாகவும் செயற்பட வேண்டும். இருப்பினும், இந்த நடவடிக்கைக்கு எதிராகத் தமது நிலைப் பாட்டை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்த வேண்டும்.

தமது எதிர்ப்புக்களை எழுத்து மூலமோ அல்லது வேறு வகையிலோ இலங்கையில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குஅனுப்பிவைப்பதன்மூலம் இந்த விடயத்தில் இலங்கை முஸ்லிம்களின் வகிபாகத்தை எடுத்துக்காட்ட முடியும்.

இந்த விடயம் குறித்து சிவில் அமைப்புக்களும், இயக் கங்களும் தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவதுடன், அமெரிக்க ஜனாதிபதி ரொனல்ட் ட்ரம்பின் தீர்மானத்தின் பாதிப்புக்கள் என்ன என்பது தொடர்பில் சமூகத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்.''- என்றுள்ளது. (எ)

# சமஷ்டியை முன்வைத்து பேச்சுக்கு வந்தால் சுதந்திரக் கட்சி ஒருபோதும் இணங்காது

## செய்தியாளர் மாநாட்டில் மஹிந்த சமரசிங்க திட்டவட்டம்

கொழும்பு, ஜன.21

சமஷ்டிமூலமாகதேசியபிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்ற அழுத்தத்தைப் பிரயோகித்து அல்லது சர்வதேசத் தூண்டுதலை ஏற்படுத்தி அதனூடாக எவரேனும் பேச்சுக்களுக்கு வந்தால் அந்தப் பேச்சுக்களுக்கு ஒருபோதும் இணங்கப்போவதில்லைஎனசிறீலங்காசுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வாராந்தசெய்தியாளர்சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அமைச்சர் மஹிந்த சமரசிங்க இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்–

### சமஷ்டி என்றால் தீர்வு இல்லை

சமஷ்டித் தீர்வு தொடர்பில் பேச வேண்டாம். சமஷ்டித் தீர்மானம் தொடர்பாக நினைத்துக் கூடப் பார்க்க வேண்டாம். சர்வஜன வாக்கெடுப்பு இல்லாது மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடன் நிறைவேற்றக்கூடிய தீர்மானங்களை நிறைவேற்றி தீர்வுக்கான பயணத்தை முன்னெடுக்க முடியும்.

இனப்பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வினை நிராகரித்து வேறேதும் தீர்வுகளை அரசு முன்வைத்தால் அதனை நிராகரிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனிடம் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூட்டாக இணைந்து வலியுறுத்தியிருந்தன.

சமஷ்டி மட்டுமே அரசியல் பிரச்சினைக்குத்தீர்வுஎன்றஅடிப்படையில் செயற்படுவது ஒருபோதும் தீர்வை ஏற்படுத்திக் கொடுக்காது. ஆரம்பத்தில் 13ஆம் திருத்தம் தொடர்பில் சர்ச்சைகள் ஏற்படும் நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் கீழான அதிகாரங்கள் தான் வலியுறுத்தப்பட்டன. அதே நிலைப்பாட்டில் தான் நாம் எப்போதும் இருந்து வருகின்றோம்.

### பேச்சுக்கே இடமில்லை

அவ்வாறு இருக்கையில் சமஷ்டி மூலமாக தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்ற அழுத்தத்தைப் பிரயோகித்து அல்லது சர்வதேசத் தூண்டுதலை ஏற்படுத்தி அதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் எவரேனும் பேச்சுக்களுக்கு வருவார்களாயின் அந்த பேச்சுக்களுக்கு ஒருபோதும் இடமில்லை.

நாம் சமஷ்டித் தீர்வு என்ற கருத்தை ஏற்றுகொள்ளத் தயாராக இல்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எப்போதும் ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டில்தான் உள்ளனர். அதேபோல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்த இடத்திலும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவேன் எனக் குறிப்பிடவில்லை.

ஆகவே அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் இந்தக் கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்து வருகின்ற போதிலும் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் இதுவரையில் எந்தத் தீர்மானங்களும் முன்வைக்கப்படவில்லை. ஆனால் அதை விரைவில் முன்வைப்போம்.

### தேசியப் பாதுகாப்பு நகர்வுக்கு முன்னுரிமை

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் நகர்வுகளை முன்னெடுக்கும் வேலைத் திட்டத்தில் சர்வசன வாக்கெடுப்பு இல்லாது நாடாளுமன்றதின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்டமூலங்களை வைத்து தீர்வுகளை நோக்கிப் பயணிக்க முடியும். அதைப்பிரதான இரண்டு கட்சிகளும் முன்னெடுக்கும்.

அதேபோல் சர்வதேச தரப்பினருக்கும் மக்களுக்கும் கொடுத்த வாக்குறுதிகள் சரியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எமது இராணுவத்தையும் ஐக்கிய நாட்டையும் காப்பாற்றும் தேசிய பாதுகாப்பு நகர்வுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றன. – என்றார்.



பருத்தித்துறைக் கடலில் கடந்த திங்களன்று உயிருக்குப் போராடிய இரு இளைஞர்களை சாதாரணப் படகைப் பயன்படுத்தி துணிச்சலுடன் செயற்பட்டு காப்பாற்றியவர் என்று கூறப்படும் கோப்ரல் சுனில் என்பவர் அச்செயலுக்காக நேற்று பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

பருத்தித்துறையில் உள்ள 551 பிரிக்கேட்டில் பணிபுரியும் – 19 ஆவது பட்டாலியன் சிங்கப் படைப் பிரிவைச் சேர்ந்த – இந்த கோப்ரல் துன்னாலையைச் சேர்ந்தவர்களான சிறிகாந்தன் கிருஷ்ணவேல் (வயது – 32), எம்.சுதர்ஸன் (வயது – 31) ஆகியோரை பாதுகாப்பாகக் காப்பாற்றினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் பலாலி படைத்தளத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் வடக்குப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேன நாயக் காவினால் அவர் பாராட்டப்பட்டார்.

வடக்கு படைத் தலைமையகத்தின் இணைப்பாளர் கேணல் திலக் மாயதுன்ன, 19 ஆவது பட்டாலியன் சிங்கப் படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் சனத் அபேதிலகா ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

# யாழ். பல்கலையின் தொலைக் கல்வி பட்டதாரிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தால் பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர் வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. அப் பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு உரித்தான பட்டதாரிகளுக்கான பட்ட அங்கிகள் எதிர் வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 10 மணியில் இருந்து பிற்பகல் 2 மணி வரை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் வைத்து வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்படி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# புகையிலை உற்பத்தி இம்முறை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

குடாநாட்டில் புகையிலைக்கு விலையுயர்வும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளமையையடுத்து இவ்வருடம் புகையிலை உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் புகையிலை உற்பத்திக்குப் பதிலாக உருளைக் கிழங்கு, வெங்காயம், மிளகாய், மரவள்ளி போன்றவற்றை உற்பத்தி செய்த விவசாயிகள் இம்முறை புகையிலை உற்பத்தியில் அதிகநாட்டம்செலுத்தியுள்ளனர்.

அரசாங்கம் புகைத்தல் பொருள்களுக்குக் கடுமையான கட்டுப்பாட்டை அமுல்படுத்தியமையைத் தொடர்ந்து கடந்த வருடம் குடாநாட்டில் புகையிலைக்குப் பதிலாக மாற்றுப் பயிர்களைச் செய்வதில் விவசாயிகள் ஈடுபாடு காட்டினர்.

புகையிலை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையால் புகையிலைக்குத் தட்டுப்பாடும் விலையுயர்வும் ஏற்பட்டுள்ளன. இதனால் சுருட்டுத் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு தொகுதி புகையிலை இவ்வருடம் இரு மடங்காக அதிகரித்துள்ளது.

இந்நிலையைத் தொடர்ந்து இவ்வருடம் புகையிலை உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. (உ)

# உழவர் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன.21

வடக்கு விவசாய அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதலமைச்சர் க.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். தமிழகத்தைச் சேர்ந்த 'பூமியை மீளுயிர்ப்பூட்டும் முன்னோடிகளின் நிறுவகம்' என்னும் அமைப்பின் பணிப்பாளர் திருமதி ரேவதி மாரிமுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

2016 ஆம் ஆண்டின் சாதனை உழவர்கள் 120 பேருக்கு இந்நிகழ்வில் கௌரவிப்பு வழங்கப்படவுள்ளது.

விழா நடைபெறபுள்ள மைதானத்தில் அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு 'வறட்சியை எதிர்கொள்ளவல்ல விவசாய முறைமைகள்' என்ற கருப்பொருளில் கண்காட்சியும் இடம் பெறவுள்ளது.

# கிணறு, குளங்களில் இருந்து நெற்பயிருக்கு நீர் இறைப்பு

## குடாநாட்டில் நிலைமை மோசம்

யாழ்ப்பாணம், ஜன.21

பருவமழை ஏமாற்றியதைத் தொடர்ந்து குடாநாட்டில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் நெற்பயிர்களுக்கு குளங்கள், கிணறுகளில் இருந்து தண்ணீர் இறைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

வடபகுதியிலுள்ள விவசாயிகள் பருவமழையை நம்பியே காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றமை வழக்கமாகவுள்ளது. இவ் வருடம் எதிர் பார்த்த பருவமழை பெய்யாமையால் குடாநாட்டில் மட்டுமல்ல, வடபகுதி எங்கும் நெற்பயிர் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளார்கள்.

இந்நிலையில் குடாநாட்டில் வலி.தென்மேற்கு பிரதேசம் உட்படப் பல பிரதேசங்களில் நெற்செய்கையில் ஈடுபட்ட பல விவசாயிகள் பொத்திவரும் நிலையிலுள்ள நெற்பயிர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் அருகிலுள்ள கிணறுகளிலிருந் தும் குளங்களில் இருந்தும் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்து தண்ணீர் இறைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

தண்ணீர் இறைக்க முடியாத நிலையிலுள்ள பெரும்பாலான நெற்பயிர்கள் தொடர்ந்து கருகிய வண்ணம் இருக்கின்றன.

இதேவேளை சில விவசாயிகள் கச்சான், பயறு , உழுந்து போன்ற சிறு தானியங்களை விதைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (உ)

# கல்விக் கண்காட்சி

மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலய ஆரம்பப் பிரிவின் கல்விக் கண்காட்சி இன்று சனிக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரூபா உதயரட்ணம் கலந்துகொள்வார். (ச)

# மானிப்பாய் இந்துவின் மரதன் ஓட்டம்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த வீதியோட்ட நிகழ்வு இன்று சனிக்கிழமை கல்லூரி முதல்வர் எம். இந்திரபாலா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஈ.எஸ்.பி. நாகரட்ணம் கலந்துகொள்வார்.

மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து போட்டி ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம–54)

# பச்சிலைப் பள்ளி அபிவிருத்திச் சங்க பொங்கல் விழா

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் பொங்கல் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பளை முல்லையடியில் சங்கத் தலைவர் கு.நா.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் சி.சத்தியசீலன், பளை பிரதேச செயலர் ஜெ.பரமோதயன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக பளை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுகந்தன், பளை பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி ச.சிவரூபன் மற்றும் பளை பிரதேச செயலாளர் செ.அனுஷியா ஆகியோரும் கலந்து கொள்வர்.

# கலைஞர்கள் கௌரவிப்பு விவரம் அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.21

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 100 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூறும் முகமாக கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி முற் பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் தேசோதய சபையால் நடத்தப்படவுள்ளது.

பிரதம அதிதியாக யாழ். இந்திய உதவித் தூதுவர் ஆர் .நடராஜன் கலந்துகொள்ளவுள்ளார்.

கலைத்துறையில் பிரபல்யமான கலைஞர்கள் தமது சுய விவரக் குறிப்புகளுடன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். யாழ். மாவட்ட சர்வோதயம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அல்லது 0776146 253 எனும் இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுள்ளாகள். (ஜ–19)

## அவசர சட்டத்துக்கு உள்துறை அமைச்சகம் அனுமதி

டில்லி, ஜன.21


தமிழக அரசு கொண்டு வர வுள்ள அவசர சட்டத்துக்கு உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. அதையடுத்து, ஜனாதிபதி ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகத் தமிழகம் முழுவதும் இளைஞர்கள், மாணவர்கள் தன்னெழுச்சியாகப் போராடி வரும் நிலையில், ஜல்லிக்கட்டு நடத்த ஏதுவாக அவசர சட்டம் பிறப்பிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான சட்ட வரைவு தயார் செய்யப்பட்டு உள்துறை அமைச்சகத்தின் பரிந் துரைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஒப்புதல் பெறப்பட்டு அவசர சட்டம் பிறப்பிக்கப்படும் என்று முதலமைச்சர் ஓ பன்னீர் செல்வம் தெரிவித்திருந்தார்.

அதன்படி, இந்த அவசர சட்ட வரைவு மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இதற்கு ஒப்புதல் அளித்து ஜனாதிபதி ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தார். (எ)

# ஜல்லிக்கட்டு நடத்த அவசர சட்டம் போராட்டத்தைக் கைவிட வேண்டும்

## தமிழக முதல்வர் பன்னீர் மாணவர்களிடம் வேண்டுகோள்



சென்னை, ஜன.21

தமிழகத்தில் ஜல்லிக் கட்டு நடத்த அவசர சட்டம் பிறப்பிக்கப்படும். இன்னும் ஓரிரு நாளில் ஜல்லிக்கட்டு நடத்தப்படும். எனவே, மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று தமிழக முதல்வர் கேட்டுள்ளார்.

தமிழகத்தில் ஜல்லிக் கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கி ஜல்லிக்கட்டை நடத்த வேண்டும் என்று கூறி தமிழகம் எங்கும் இலட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் இளைய தலைமுறையினர் அமைதியான முறையில் அறவழியில் 5 ஆவது நாளாக போராடி வருகிறார்கள். இதன் காரணமாக நேற்று டில்லியில் பிரதமரைச் சந்தித்து தமிழகத்தின் கோரிக்கைக்கு உதவுமாறு தமிழக முதல்வர் ஓ பன்னீர்செல்வம் பேச்சு நடத்தினார். ஆனால், பிரதமர் மோடி, வழக்கு உச்ச நீதிமன்றத்தில் உள்ளதால் உதவ இயலாது என்று கைவிரித்துவிட்டார்.

இதனால் உடனடியாகத் தமிழகத்துக்குத் திரும்பாமல் டில்லியிலேயே தங்கி சட்ட நிபுணர்களுடனும், தமிழக அரசின் உயரதிகாரிகளுடனும் ஆலோசனையில் அவர் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து தமிழக முதல்வர். நேற்றுக் காலையில் டில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்து அவர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

ஜல்லிக்கட்டு நடத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. ஜனாதிபதி, ஆளுநர் ஆகியோரின் ஒப்புதல் பெறப்பட்டு, அவசர சட்டம் பிறப்பிக்கப்படும்.

இது தொடர்பான சட்ட வரைவு உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான பணிகளைத் தமிழக அரசின் உயர் அதிகாரிகள் மேற்கொள்வர். மத்திய அரசின் மிருகவதை தடுப்புச்சட்டத்தில் மாநில அளவில் திருத்தம் கொண்டு வர முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டு ஓரிருநாள்களில் நடைபெறும் என்பதால், பொதுமக்கள், இளைஞர்கள், மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும்-என்றார். (எ)

## மத்திய அரசு கேட்டதற்கு இணங்க ஜல்லிக்கட்டு வழக்கு ஒத்திவைப்பு

டில்லி, ஜன.21

ஜல்லிக்கட்டு வழக்கில் ஒரு வாரத்துக்கு தீர்ப்பு வழங்கக் கூடாது என்று மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் கோரிக்கைவைத்தது. இதை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஏற்றுக் கொண்டனர்.

ஜல்லிக்கட்டு போட்டியை நடத்துவதற்கு ஏதுவாக ஓரிரு நாள்களில் அவசரசட்டம்கொண்டுவரப்படும் என்று தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் டில்லியில் நேற்று அறிவித்தார்.

இந்தநிலையில், தமிழக அரசின் நடவடிக்கையில் குறுக்கிடாமல் இருக்க ஜல்லிக்கட்டு வழக்கில் ஒரு வாரத்துக்குத் தீர்ப்பு வழங்கக் கூடாது என்று மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் நேற்று கோரிக்கை வைத்தது.

இதுதொடர்பாக மத்திய அரசின் தலைமை சட்டத்தரணி முகுல் ரோகத்கி தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

'ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இதனால் அடுத்த ஒரு வாரத்துக்கு ஜல்லிக்கட்டு வழக்கில் தீர்ப்பு வழங்கக் கூடாது.' என்றுள்ளது.

மத்திய அரசின் இந்தக் கோரிக்கையை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஏற்றுக் கொண்டனர். மேலும், அவசர சட்ட நடவடிக்கையில் தலையிடாமல் இருப்பதற்காக ஒருவார காலத்துக்கு தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. (எ)

## அவசர சட்டம் கொண்டுவந்தால் சட்டப்படி அதை எதிர்கொள்வோம்

### 'பீட்டா' அமைப்பு தெரிவிப்பு

டில்லி, ஜன.21

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக மத்திய, மாநில அரசு அவசர சட்டம் கொண்டு வந்தால் அதை சட்ட ரீதியாக அணுகுவோம் என்று விலங்குகள் நல அமைப்பு ('பீட்டா') தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் 'பீட்டா' அமைப்பின் செய்தித் தொடர்பாளர் மணிலால் வல்லியத்தே செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

எங்களது விழிப்புணர்வு பிரசாரம் அனைத்து விலங்குகளின் நலன்களுக்காகவும் நடத்தப்படுகிறது. தமிழகத்தில் குறிப்பிட்ட பூர்வீக காளைகள் இனம் அழிந்து வருவதற்கு 1980 இல் தமிழக அரசு மேற்கொண்ட வெள்ளைப் புரட்சியும் (பால் உற்பத்தி பெருக்கம்), கலப்பின காளை விருத்தித் திட்டங்களுமே காரணம். அன்று முதலே பூர்வீகக் காளைகள் இனம் அழியத் தொடங்கிவிட்டது.

தவறாகப் புரிந்து கொண்டதன் அடிப்படையிலேயே ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. எனவே, அனைத்து அரசியல்வாதிகளும் இது பற்றி முடிவு எடுக்கும் முன்பாக இதுதொடர்பாக இந்திய அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள உண்மைகளையும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் படித்துப் பார்க்க வேண்டும்.

ஜல்லிக்கட்டில் காளைகளுக்குக் கொடுமை நிகழ்த்தப்படுகிறது. காளைகள், தங்களுக்குத் துன்புறுத்தல் ஏற்பட்டாலோ, அல்லது சண்டையிட்டாலோ மட்டுமே எதிர்ப்பைக் காட்டும் குணாதிசயம் கொண்டவை. வலி, பயம், காயம் ஏற்படும்போதுதான் அவை எதிர்ப்பைக் காட்டத் தயாராகின்றன.

ஜல்லிக்கட்டு ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சி. எனவே, அது தேவையற்ற பாதிப்பு என்கிற வகைகளில் வருகிறது. பாரம்பரியமா? சட்டமா? என்கிற கேள்வி எழும்போது சட்டமே முன்னுரிமை பெறும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தி உள்ளது. சட்டத்தையும், உச்சநீதிமன்றத்தின் உத்தரவையும் மதிப்பதால் ஜல்லிக்கட்டு மீதான தடைக்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்கிறோம்.

ஜல்லிக்கட்டு நடத்துவதற்காக மத்திய, மாநில அரசுகள் அவசர சட்டம் கொண்டு வந்தால், அதை சட்ட ரீதியான வழியில் அணுகுவோம். ஜல்லிக்கட்டுக்கு எதிரான விழிப்புணர்வு பிரசாரத்தையும் தொடர்ந்து மேற்கொள்வோம்." -என்றார். (எ)

## ஜல்லிக்கட்டு நடைபெறும் சரியான நாள் தெரியும்வரை போராட்டம் தொடரும்

### மாணவர்கள் தெரிவிப்பு

சென்னை, ஜன.21

ஜல்லிக்கட்டு எந்தத் திகதியில் நடைபெறும் என்று அரச தரப்பில் மிகத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். வாடிவாசலில் எந்தத் திகதியில் ஜல்லிக்கட்டு நடக்கும் என்பது உறுதியாகத் தெரியும் வரை நாங்கள் போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்று மாணவர்கள், இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜல்லிக்கட்டை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று தமிழகத்தில் இளைஞர்களும், மாணவர்களும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இளைஞர்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ள நிலையில், அவர்களுக்கு ஆதரவாகப் பல்வேறு தரப்பினரும் களத்தில் இறங்கியுள்ளனர்.

இந்தநிலையில், ஜல்லிக்கட்டுப்போட்டி நடத்த வழிவகை செய்ய புதிய சட்டம் கொண்டுவர உள்ளோம் என முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார். இன்னும் ஓரிரு நாள்களில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான அறிவிப்பு வந்து விடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழக அரசின் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் வகையில் இளைஞர்கள், மாணவர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதையடுத்து போராட்டம் நடத்திவரும் மாணவர்கள் கூறியவை வருமாறு:

ஜல்லிக்கட்டு நடத்துவதற்காகப் புதிய சட்டம் ஒன்றைத் தாம் இயற்றுகிறோம் என முதலமைச்சர் வெறும் வாய்மொழியாகத்தான் கூறி உள்ளார். ஜல்லிக்கட்டு நடக்கும் வகையில் அவர் எந்த வித உத்தரவாதமும் இதுவரை கொடுக்கவில்லை. ஜல்லிக்கட்டு எந்தத் திகதியில் நடைபெறும் என்று அரசு தரப்பில் மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டும். வாடிவாசலில் எந்தத் திகதியில் ஜல்லிக்கட்டு நடக்கும் என்பது உறுதியாகத் தெரியும் வரை நாம் போராட்டத்தைக் கைவிட மாட்டோம். இறுதி முடிவு தெரியும்வரை எங்களது போராட்டம் தொடர்ந்து நடைபெறும்."-என்றனர். (எ)

## மத்திய அரசைக் கண்டித்து தி.மு.கவினர் ரயில் மறியல்!

### ஸ்டாலின், கனிமொழி உட்பட பலர் கைது

சென்னை, ஜன.21

சென்னை, மாம்பலம் ரயில் நிலையத்தில் மத்திய அரசைக் கண்டித்து ரயில் மறியல் போராட்டம் நடத்திய தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.கவினரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து தி.மு.கவினர் மாநிலம் முழுவதும் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், தி.மு.க. செயல்தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் மாம்பலம் ரயில் நிலையத்தில் மறியல் போராட்டத்தில் அதிகமான தி.மு.க. உறுப்பினர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, எழும்பூர் ரயில் நிலையத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிமாறன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் சேகர்பாபு உள்ளிட்ட தி.மு.கவினர் மறியல் போராட்டம் நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து தயாநிதிமாறன், கனிமொழி உள்ளிட்டோரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தெஹ்ரானில் 17 மாடிக் கட்டடம் இடிந்ததில் தீயணைப்பு வீரர் 30 பேர் பலி; 38 பேர் காயம்





தீயை அணைக்க முயன்ற வேளையில் நிகழ்ந்த அனர்த்தம்

தெஹ்ரான், ஜன.21

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் 17 மாடி கட்டடம் ஒன்று நேற்றுமுன்தினம் தீபிடித்ததால் இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் சிக்கி தீயணைக்கும் வீரர்கள் 30 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்; 38 பேர் காயமடைந்தனர்.

தலைநகர் தெஹ்ரானில் பிரபல தொழில் அதிபர் ஹபீப் எல்கானியனுக்குச் சொந்தமான பிளாஸ்ரிக் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அந்த நகரில் உள்ள 17 மாடிக் கட்டடத்தில் இயங்கி வந்தது. நேற்று முன்தினம் காலை 8 மணி அளவில் இந்தக் கட்டடத்தில் திடீரெனத் தீ பரவியதால் அத்தனை மாடிகளுக்கும் பரவியது.

அதைத் தொடர்ந்து தீயை அணைக்க 100 இற்கும் மேற்பட்ட தீயணைக்கும் படை வீரர்கள், ராட்சத கிரேன்களுடன் உடனடியாக அந்தக் கட்டடத்துக்கு விரைந்தனர். அவர்கள் நாலாபுறமும், கிரேன்களில் இருந்தவாறு தண்ணீரைப் பீய்ச்சி அடித்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த அடுக்கு மாடிக் கட்டடம் திடீரென இடிந்து சரிந்தது. அதன் இடிபாடுகள் தீயணைக்கும் வீரர்கள் இருந்த கிரேன்கள் மீது விழுந்தன. இதில் தீயணைக்கும் வீரர்கள் 30 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கியும், தீக்காயம் அடைந்தும் உயிரிழந்தனர்; 38 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதேவேளை, தீ விபத்து எதனால் நிகழ்ந்தது என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

தீ விபத்தைத் தொடர்ந்து, முற்றிலுமாக இடிந்து விழுந்த கட்டட இடிபாடுகளுக்கு இடையே சிக்கியவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர் மீட்புப் படையினர். (எ)

## விமானத் தாக்குதலில் சிரியாவில் தீவிரவாதிகள் 40 பேர் கொலை!



பெய்ரூட், ஜன.21


சிரியாவின் வடக்குப் பகுதியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்ட ஜிகாதிஸ்ட் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

சிரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள முன்னாள் அல்குவைதாவுடன் தொடர்புடைய பெடே அல்-ஷாம் முன்னணி அமைப்பைச் சேர்ந்தவர்களின் முகாம்களைக் குறிவைத்து நேற்று விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்ட ஜிகாதி தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று மனித உரிமைக்கான சிரிய கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

அலெப்போ மாகாணத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பது உடனடியாகத் தெரியவில்லை என்று கண்காணிப்பு மையம் கூறியுள்ளது. (எ)

## புதிய பூச்சி இனத்துக்கு ஜனாதிபதி ட்ரம்பின் பெயர்!



நியூயோர்க், ஜன.21

புதிய பூச்சி இனம் ஒன்றுக்கு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்பின் பெயரை கலிபோர்னிய விஞ்ஞானிகள் வைத்துள்ளனர்.

நியோபல்பா ரொனால்ட்ரம்பி என்ற பெயர் வைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய வகைப் பூச்சியின் தலையில் மஞ்சளும் வெண்மையும் கலந்த நிறத்தில் மேல் பகுதிகள் அமைந்துள்ளன. அதனால் அந்தப் பூச்சியினம் ட்ரம்பின் தலைமுடி போல இருப்பதால் அந்தப்பெயரை வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பூச்சியின் மேல் பகுதியைப் பார்த்ததும் ட்ரம்பின் தலைமுடியைப் போல் இருப்பதைத் தான் உணர்ந்து, அந்தப்பெயரை வைத்துள்ளதாக பரிணாம உயிரியல் விஞ்ஞானி வஸ்ரிக் நஸாரி தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தப் புதிய பெயரால் பூச்சிக்கு மிகுந்த வரவேற்புக் கிடைக்கும் என்பதோடு, அவை இருக்கும் இடங்களைப் பாதுகாக்க வழிவகுக்கும். மேலும், இது நாள் வரையிலும் கவனிக்கப்படாமல் இருந்த பல்லுயிர்களின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு அமெரிக்காவில் ஏற்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தப் பூச்சி வகைகளையும், மற்றைய ஆராய்ச்சிக் கூடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வகைகளையும் ஆராய்ந்த பின்னர், தாம் புதிய வகை பூச்சி இனத்தைக் கண்டுபிடித்துள்ளமையை விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். (எ)

## ஜேர்மனியில் கஞ்சாவுக்கு தடையில்லை

பேர்ளின், ஜன.21

ஜேர்மனியில் கஞ்சாவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கஞ்சாவை மருந்தாக அனைவரும் பயன்படுத்தலாம் என்ற சட்டம் தற்போது ஜேர்மனியில் கொண்டுவரப்பட்டுள்ளது.

பசியின்மை, நாள்பட்ட வலிகள், குமட்டல், வெண்படலம் போன்ற பலவிதமான நோய்களை நிவர்த்தி செய்ய கஞ்சா மருத்துவ ரீதியாக உதவுகிறது.

இந்த நன்மைகளைக் கருத்திற் கொண்டு அந்நாட்டு அரசு இந்த விடயத்தை நிறைவேற்றியுள்ளது.

ஆனாலும், மருத்துவ ரீதிக்காக மட்டுமே கஞ்சாவை உபயோகப்படுத்த வேண்டும் என்று ஜேர்மனி அரசு மக்களிடம் கூறியுள்ளது. (எ)

## அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க அணி சேர வேண்டும்



உலக நாடுகளுக்கு சீனா அழைப்பு

பீஜிங், ஜன.21

அணு ஆயுதங்கள் இல்லாத உலகை உருவாக்க அணி சேர வேண்டும் என்று சீன ஜனாதிபதி உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சுவிற்ஸர்லாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள சீன ஜனாதிபதி, ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் உரையாற்றியுள்ள போதே அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க சகல நாடுகளும் அணிதிரள வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

''அடுத்து வரும் சந்ததியினருக்கு அணு ஆயுதங்கள் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன. இதனால், அனைத்து நாடுகளும் அணு ஆயுதங்களை நிராகரிக்கின்றன. அத்துடன், உலகத்திலிருந்து அணு ஆயுதங்களை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும்.

''மேலும் உலகில் பலம் பொருந்திய நாடுகள் ஒவ்வொன்றும், ஏனைய சிறிய நாடுகளின் விதிமுறைகளை மதிக்க வேண்டும். ஒவ்வொரு பெரிய நாடும் தமது கோட்பாடுகளை மீறாமலும், சிறிய நாடுகளை ஆக்கிரமித்து தமது கொள்கையை அவற்றின் மீது திணிக்காத நிலை உருவாக வேண்டும்.''-என்றார். (எ)

# லிபியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் முகாம்கள்மீது அமெரிக்கா தாக்குதல்

ஒபாமாவின் கட்டளைக்கு இணங்க நடத்தப்பட்ட இறுதித் தாக்குதல்

வொஷிங்டன், ஜன.21

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் கட்டளைக்கு இணங்க, லிபியாவில் இயங்கி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகளின் 2 முகாம்கள் அமெரிக்க விமானப் படையினரால் நேற்று முன்தினம் இரவு தாக்கி அழிக்கப்பட்டன. இதில் சுமார் 80 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதுவே ஒபாமாவின் கட்டளையின் பேரில் நடத்தப்பட்ட இறுதித் தாக்குதல் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத்தாக்குதல்களை பி-2 ரக குண்டுதாங்கி விமானங்கள் மேற்கொண்டன. அமெரிக்காவின் மிசோரியில் இருந்து புறப்பட்ட இந்த விமானங்கள் நூறுக்கும் அதிகமான குண்டுகளை முகாம்களின் மீது வீசின என்று தெரியவருகிறது. இந்தத் தாக்குதலுக்காக அந்த விமானங்கள் 30 மணி நேரம் பறந்தன என்றும் தெரியவந்துள்ளது.

2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த விமானங்கள் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அழிக்கப்பட்ட இந்த முகாம்களில் பயிற்சி பெற்று வந்த பயங்கரவாதிகளை, ஐரோப்பா உள்ளிட்ட அண்டை நாடுகளில் தாக்குதலில் ஈடுபடுத்த ஐ.எஸ். தலைமை எண்ணியிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த முகாம்கள் தொடர்பில் ஒபாமாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து, அவற்றைத் தாக்கி அழிக்கும்படி ஒரு சில தினங்களுக்கு முன்னர் அவர் உத்தரவிட்டிருந்தார். அதன் பேரிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதுவே ஒபாமாவின் பணிப்பின் பேரில் நடத்தப்பட்ட இறுதித் தாக்குதல் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# மன்னார் மாவட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு கடந்த வருடம் பெருந்தொகை நிதி ஒதுக்கீடு!

மன்னார், ஜன.21

கடந்த வருடம் என்று மில்லாதவாறு மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு கூடு தலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப் பிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மன்னார் மாவட்ட செயலகத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட அபிவி ருத்தித் திட்டங்கள் பற்றி ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் மாநாடு ஒன்று அரச அதிபர் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போதே இந்த விடயத்தை அவர் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரம் மில் லியன்ரூபாசெலவில்வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. அதில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மட்டும் 2 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா செலவில் வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிதி இவ் வளவு காலமும் மன்னார் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய் யப்படவில்லை.

கடந்தமுறைதான்இவ்வளவு தொகை நிதி மன்னார் மாவட் டத்துக்கு ஒதுக்கீடு செய் யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

மன்னார் மாவட்ட மக்களா கிய நாம் ஜனாதிபதி, பிரதமர், நிதி ஒதுக்கீடு செய்து தந்த ஒவ்வோர் அமைச்சுக்களுக்கும் அத்துடன் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கும் நன்றி யுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

விஷேடமாகஇந்தநிதிகளை ஒதுக்கீடு செய்வதற்குக் கடின மாக உழைத்த மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவர்களான வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், அமைச்சர் றிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர் மலநாதன், மஸ்தான், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை சிறந்த முறையில் செயற்படுத்திய மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மேலதிக அரச அதிபர், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலக கணக்காளர், மாவட் டத்தின் ஐந்து பிரதேச செய லாளர்கள் உட்பட இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய செயற் பட்ட ஒவ்வோர் அதிகாரி களுக்கும் நாம் நன்றி கூற வேண்டும்.- என்றார். (ஐ-112)

# மைத்திரியின் வருகையால் மெருகுபெறும் பாடசாலை!

## கவனிக்காதவர்கள் ஓடியோடி கவனிப்பு





முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட வித்தியானந்தாக் கல்லூரி மிக நீண்டகாலமாக எவ்வித சுத்தப்படுத்தும் அல்லது அழகுபடுத்தும் வேலைத்திட்டங்களும் இல்லாமல் இருந்தது.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவின் வருகையை முன் னிட்டு பல்வேறு தரப் பினரும் முண்டியடித்து பாடசாலையை ஓடியோடி கவனித்து வருகின்றனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி இக்கல்லூரியில் இடம்பெறும் நிகழ்வில் ஜனாதிபதிகலந்துகொள்ள உள்ளமையால் அனைத்து தரப்பினாலும் இவ்வா றான அழகுபடுத்தும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன என்பதுடன் முன்னாயத்த வேலைகளும் இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை, இக்கல் லூரியின் சுற்றுச்சூழல் மிக நீண்டகாலமாக வ ராலும் கவனிப்பாரற்றுக் கிடந்தமை குறிப்பி டத்தக்கது. (இ-82)

# பற்றிக் ஆடை உற்பத்திக்கு வழங்கப்பட்டன உள்ளீடுகள்

## டெனிஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில்



வவுனியா, ஜன.21


வவுனியா தெற்கு பிரதேச செயலகத்துக் குரிய கலம்பகஸ்வெவ கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் துக்கு பற்றிக் ஆடைகள் உற்பத்தி செய்வதற்கான சகல உள்ளீடுகளும் வழங் கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ் வரனின் கிராம மட்ட அமைப்புக்களை வாழ்வா தாரத்தில் உயர்த்தும் செயற்றிட்டத்தின் கீழ், மாகாண குறித்தொதுக் கப்பட்ட நன்கொடை நிதியில் இருந்து 10 லட்சம் ரூபா நிதி ஒதுக் கப்பட்டு இவை வழங் கப்பட்டுள்ளன.

இந்த உதவி வழங்கும் நிகழ்வு வவுனியாவில் உள்ள கிராம அபிவிருத் தித் திணைக்கள மண்ட பத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பற்றிக் உற்பத்திக்கான உள்ளீடு களை வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சபை யின் பிரதி அவைத்தலை வர் க.கமலேஸ்வரன், மாகாணசபை உறுப்பினர் ஜி.டி.லிங்கநாதன், கிராம அபிவிருத்தித் திணைக் களத்தின் மாகாண பணிப் பாளர் ஜெ.ஜெ.சி.பெலி சியன், வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தி உத் தியோகத்தர் ஆகியோர் இணைந்து வழங்கினர். (ஐ-100)

# காட்டு யானைகள் அட்டகாசம்; அச்சத்தில் மக்கள்



முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் மாங்குளம் வீதியில் காட்டு யானை கள் அட்டகாசம் அதி கரித்து காணப்படுவதால் அச்சத்தில் பயணிக்க வேண்டியுள்ளது என்று மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் மாங்குளம் வீதி யில் பிற்பகல் மூன்று மணிக்கே யானைகள் வீதி ஓரத்தில் நடமாடு கின்றன என்றும் அவ் வழியாகச் செல்பவர் களை இவை துரத்து கின்றன என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்

வேலைகளின் நிமித் தம் செல்லும் பெண்கள் மீண்டும் வீடு திரும்பிச் செல்லும் வேளையில் அச்சத்துடன் செல்கின் றனர் என்றும் யானை களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த உரிய அதி காரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ-81)

# வவுனியாவில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஜன.21

போக்குவரத்துக்கு இடையூறாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தகர்களின் பொருள்களை, வவு னியா நகரசபை ஊழியர்கள் நேற்று பறிமுதல் செய்து வவுனியா நகர சபைக்கு ஏற்றிச் சென்றனர்.

பறிமுதல் செய்த மரக்கறிகளை மீளத் தருமாறு கோரி, வீதியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட இரு வர்த்தகர்கள், ஹோரவப்பத்தான வீதியின் நடுவில் இருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இத னால் சிறிது நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸார் இரு வர்த் தகர்களையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று விசாரணைகளை நடத்தியிருந்தனர். அத்துடன் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களை யும் அங்கிருந்து அகற்றினர். (ஐ-100)

# புதுக்குடியிருப்பில் சுகாதாரச் சீர்கேடு சந்தை, வியாபார நிலையங்களில்!

## சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

புதுக்குடியிருப்பு , ஜன.21


புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் நகர்ப்புறங்களிலுள்ள உணவு கையா ளும் நிலையங்கள் , வர்த்தக நிலை யங்கள் உட்பட பொதுச் சந்தையைச் சுற்றிப் பார்வையிட்ட சுகாதார வைத் தியஅதிகாரி, சுகாதாரச் சீர்கேடுகளு டன் காணப்பட்ட வியாபார நிலை யங்களின் உரிமையாளர்களைக் கடு மையாக எச்சரித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடி யிருப்பு பிரதேசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுக் கடமையை பொறுப் பேற்றுக் கொண்ட சுகாதார வைத்திய அதிகாரி கெங்காதீஸ்வரன் கடந்த திங்கட்கிழமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சகிதம் புதுக்குடியிருப்பு நகரப்பகுதியிலுள்ள உணவுகையாளும் நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் உட்படப் பொதுச் சந்தையையும் சுற் றிப் பார்வையிட்ட போதும் அவ் வேளை பல வியாபார நிலையங்கள் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வந்தமை தெரிய வந்தது.

இதையடுத்து அவர்களைக் கடுமை யாக எச்சரிக்கை செய்த வைத்திய அதிகாரி, எதிர்காலங்களில் சுகாதார விதிமுறைகளை முழுமையாகப் பின் பற்றுமாறும் இவற்றைக் கடைப் பிடிக்காதவர்களுக்கு எதிராகக் கடு மையான முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத் தியுள்ளார்.

இதேவேளை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இம் மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சுகாதார விதிமுறைகள் சம்பந்தமாகவும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் குறித்தும் இடம்பெறவுள்ள கருத்தரங்கில் தவறாது கலந்து கொள் ளுமாறு வர்த்தகர்களுக்கு அறிவிக் கப்பட்டுள்ளது. (இ-59)

## ஒலிம்பிக் வீரரை வீழ்த்தினார் பாபா!



டில்லி, ஜன.21

புரோ மல்யுத்த லீக் 2 ஆவது சீசன் தற்போது இந்தியாவில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில், நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற நட்பு ரீதியிலான போட்டியில் பாபா ராம்தேவ், 2008 ஆம் ஆண்டு பெய்ஜிங் ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற ஆந்த்ரே ஸ்டாட்னிக் என்ற உக்ரைன் மல்யுத்த வீரருடன் மோதியுள்ளார்.

இந்த மோதலின் இறுதியில் பாபா ராம்தேவ் உக்ரைன் மல்யுத்த வீரரை வீழ்த்தியுள்ளார்.

# ஆஸ்திரேலியாவின் சுழல்பந்துவீச்சு ஆலோசகரானார் மொன்டி பனீசர்!

சிட்னி, ஜன.21

ஆஸ்திரேலிய அணியின் சுழல் பந்துவீச்சு ஆலோசகராக இங்கிலாந்தின் மொன்டி பனீசர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடரை முன்னிட்டே மொன்டி பனீசர் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிட்னியில் கழக மட்டப் போட்டிகளில் விளையாடியதைத் தொடர்ந்தே ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்துவீச்சு ஆலோசகராக பனீசர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக உபகண்டத்தில் 2012, 2013 ஆண்டுகளின் பருவகாலத்தில் நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து



ஈட்டிய வெற்றியில் மொன்டி பனீசர் பெரும் பங்காற்றியிருந்தார்.

இடது கை சுழல்பந்து வீச்சாளரான பனீசர் 17 விக்கெட்களை வீழ்த்தியதன் மூலம் இங்கிலாந்து அணி அந்தத் தொடரில் வெற்றியை சுவைத்தது.

எனினும் 2013, 2014 ஆம் ஆண்டுகளின் பருவகாலத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக மெல்பேர்னில் கடைசியாக தனது 50 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடினார்.

பின்னர், கடந்த வருடம் இந்தியாவுக்கான டெஸ்ட் தொடருக்கு அவர் இங்கிலாந்து அணிக்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை.

இதேவேளை, நான்கு வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கான தனது கடைசி கிரிக்கெட் விஜயத்தின்போது 4- 0 என தோல்வி அடைந்த ஆஸ்திரேலியா, கடந்த வருடம் இலங்கையிடம் 3-0 என தொடரைப் பறிகொடுத்தது.

இந்தத் தோல்விகளின் காரணமாகவே பனீசரை ஆலோசகராக நியமிக்க வேண்டும் என ஆஸ்திரேலியா கிரிக்கெட் நிறுவனம் முடிவு செய்தது என்று தெரிவிக்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவின் இடது கை சுழல்பந்து வீச்சாளர் ஸ்டீவ் ஓ கீவுக்கு மொன்டி பனீசர் ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

# 4 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார் கெர்பர்




மெல்பேர்ன், ஜன.21

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் கெர்பர் 6-0, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வென்று 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

5 ஆம் நாளான நேற்று பெண்கள் ஒற்றையர் பிரிவு 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முதல்தர வீராங்கனை கெர்பர் (ஜேர்மனி)- பிளிஸ்கோவா (செக்குடியரசு) மோதினர்.

இதில் கெர்பர் 6-0, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வென்று 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். அவர் 4 ஆவது சுற்றில் அமெரிக்க வீராங்கனை வான்டேவங்ஹியை எதிர்கொள்கிறார்.

வான்டேவங்ஹி 3 ஆவது சுற்றில் கனடாவின் பவுச்சர்ட்டை 6-4, 3-6, 7-5 என்ற செட் கணக்கில் வீழ்த்தியிருந்தார்.

இதேவேளை, 3 ஆவது சுற்றில் 11 ஆம் நிலை வீராங்கனையான எலினா சிவிடோ லினா தோற்றார். அவரை ரஷ்யாவின் பவ்லயூ சென் கோவா 7-5, 4-6, 6-3 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

செர்பியாவின்ஜோன் கோவிச் 3 ஆவது சுற்றில் தோற்றார். அவரை ரஷ்யாவின் 8 ஆம் நிலை வீராங்கனையான குஸ்னெட் சோவா 6-4, 5-7, 9-7 என்ற செட் கணக்கில் வீழ்ந்தார்.

நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2 ஆவது சுற்று ஆட்டத்தில் ரபேல் நடால் பக்டேடிஸை (சைப்ரஸ்) வீழ்த்தியுள்ளார்.

# கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் வழங்கினார்





யாழ்ப்பாணம், ஜன.21

வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தனது நிதி ஒதுக்கீட்டின் மூலம் விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளார்.

இதற்காக அவர் ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இந்த நிதி ஒதுக்கீட்டில் புங்குடுதீவு நண்பர்கள் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களையும், சரவனை மேற்கு திருவள்ளூர் விளையாட்டுக் கழகத்துக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களையும், புங்குடுதீவு ஊரதீவு சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கு 25 ஆயிம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கியுள்ளார்.

மேலும், ஊர்காவற்றுறை கரம்பொன் ஹீரோ விளையாட்டுக் கழகத்திற்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை, விந்தன் கனகரத்தினத்தால் அந்தந்த விளையாட்டுக் கழக நிர்வாகிகளிடம் கையளித்துள்ளார். (க-21)

# 2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சதம் அடித்தார் யுவராஜ் சிங்!



கட்டாக், ஜன.21

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தொடரைக் கைப்பற்றியது.

இந்தப் போட்டியில், யுவராஜ் சிங் 127 பந்துகளில் 21 பவுண்டரிகள் 3 சிக்சர்களுடன் 150 ஓட்டங்களை விளாசினார்.

இதன் மூலம், யுவராஜ் சிங் தனது முந்தைய அதிகபட்ச தனிப்பட்ட ஓட்ட எண்ணிக்கையான 139 ஓட்டங்களைக் கடந்து சென்றுள்ளார். எனவே, இதுவே அவரது சிறந்த ஓட்டப் பெறுதியாக அமைந்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில், யுவராஜ் சிங் அவ்வப்போது பந்தை பவுண்டரிகளுக்கு விரட்டிக் கொண்டிருந்தார்.

இதனால், ஓட்ட விகிதம் சற்று உயர்ந்து கொண்டிருந்தது. நேரம் ஆக ஆக யுவராஜ் சிங்கின் ஆட்டத்தில் அனல் பறந்தது.

அவர் 56 பந்தில் அரை சதம் அடித்தார். இவரது அரைசதத்தால் இந்தியா 21.3 ஓவரில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

2011 உலக கோப்பை தொடரில், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சென்னையில் இடம்பெற்ற போட்டிக்கு பின்னர் யுவராஜ் சிங் அடித்துள்ள முதல் சதம் இதுவாகும்.

இதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் 17 இன்னிங்ஸில் இவரது சராசரி ஓட்டப் பெறுதி வெறும் 18.31 மட்டுமேயாகும்.

இந்த காலகட்டத்தில் 10 க்கும் அதிகமான இன்னிங்ஸில் விளையாடிய முதல் 7 துடுப்பாட்டக்காரர்களில் மிக மோசமாக விளையாடியவராக யுவராஜ் இருந்தார்.


இத்தகைய மோசமான புள்ளி விவரங்களை யுவராஜ் நேற்று முன்தினம் சிதறடித்து, மீண்டும் தனது பழைய நிலைக்குத் திரும்பி இந்திய அணிக்கு நம்பிக்கை அளித்துள்ளார்.

150 ஓட்டங்களே ஒருநாள் போட்டியில் யுவராஜின் அதிகபட்ச ஓட்டப் பெறுதியாகும். இதற்கு முன், ராஜ்கோட்டில் கடந்த 2008 இல் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 138 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

ஒருநாள் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக 150 ஓட்டங்களைக் கடந்த 6 ஆவது வீரர் என்ற பெருமையுடன், முதல் இந்திய வீரர் என்ற சாதனையையும் யுவராஜ் படைத்துள்ளார்.

## சம்பியன்ஸ் கிண்ண போட்டிக்கு முன் இங்கிலாந்தை வென்றதில் மகிழ்ச்சி!

### *விராட் கோஹ்லி கூறுகிறார்*



கட்டாக், ஜன.21

சம்பியன்ஸ் டிராபி போட்டிக்கு முன்பாக இங்கிலாந்து தொடரை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது என்று இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி கூறியுள்ளார்.


இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதிய 2 ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் கட்டாக்கில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் இந்தியா 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற் றது. இதன் மூலம் தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியா கைப் பற்றி உள்ளது.

இந்த வெற்றி குறித்து விராட் கோஹ்லி தெரிவித்தவை வருமாறு:-

எங்களது தொடக்கம் சிறப்பாக அமையவில்லை. டோனி, யுவராஜ்சிங் நிலைத்து நின்று விளையாடினர். 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டை இழந்துவிட்டு அதிலிருந்து மீண்டு 381 ஓட்டங்களைக் குவிந்தது அற்புதமானது.

ஒரு கட்டத்தில் விக்கெட்டுகளை கைப்பற்ற முடியும் என்பதை அறிந்து இருந்தோம். ஆனால் பந்துவீச கடினமாக இருந்தது. கடைசிக் கட்டத்தில் எங்களது பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசினர். சம்பி யன்ஸ் கிண்ணப் போட்டிக்கு முன்பாக இங்கிலாந்து தொடரை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இது எங்களுக்கு திறமையை வெளிப்படுத்த உத்வேகம் அளிக்கும். நாங்கள் 75 சதவீத திறமையைத்தான் வெளிப்படுத்தி இருக்கிறோம் என்றும் கூறியுள்ளார்.

## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: ரட்வன்ஸ்கா அதிர்ச்சித் தோல்வி!



மெல்பேர்ன், ஜன.21

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் 3 ஆம் நிலை வீராங்கனையான ரட்வன்ஸ்கா 2 ஆவது சுற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இந்த தொடருக்கான 3 ஆம் நிலை வீராங்கனையான அக்னிஸ்கா ரட்வன்ஸ்கா 2 ஆவது சுற்றில் குரோசியாவின் மிர்ஜனா லூசிக்-பரோனியை எதிர்கொண்டார்.

இதில் உலகத் தரவரிசையில் 79 ஆவது இடத்தில் இருக்கும் லூசிக்- பரோனி ரட்வன்ஸ்காவிற்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார்.

அவர் ரட்வன்ஸ்காவை 6-3, 6-2 என நேர்செட் கணக்கில் வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இந்த தொடரில் முன்னிலை வீராங்கனை ஒருவர் முதன்முறையாக தொடரில் இருந்து வெளியேறியுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் தொடரில் ரட்வன்ஸ்கா அரையிறுதி வரை முன்னேறியிருந்தார். மேலும், விம்பிள்டன் தொடரில் இறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சச்சினுக்குப் பின் டோனி!



கட்டாக், ஜன.21

சச்சின் டெண்டுல்கருக்கு பின்னர் ஒருநாள் போட்டியில் சொந்த மண்ணில் 4,000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டிய இந்திய அணியின் 2 ஆவது வீரர் என்ற பெருமையை டோனி பெற்றுள்ளார்.


நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது போட்டியில் 49 ஓட்டங்களை எடுத்த போது இந்த மைல்கல்லை டோனி எட்டினார்.

சொந்த மண்ணில் அதிக ஓட்டங்களை எடுத்த வீரர்கள் பட்டியலில் சச்சின் 6,976 ஓட்டங்களுடன் (167 போட்டிகள்) முதலிடத்திலும், டோனி 4,085 ஓட்டங்களுடன் (108 போட்டிகள்) 2 ஆவது இடத்திலும், ராகுல் டிராவிட் 3,406 ஓட்டங்களுடன் (97 போட்டிகள்) 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

மேலும், சர்வதேச ஒருநாள் போட்டியில், 35 வயதுக்கு மேற்பட்ட ஜோடி (டோனி 35 வயது 196 நாள், யுவராஜ் 35 வயது, 38 நாள்), ஒரே இன்னிங்ஸில் சதம் அடிப்பது இது 3 ஆவது முறையாகும். இதற்கு முன், 2015 உலக கோப்பையில் பங்களாதேஷ், ஸ்கொட்லாந்துக்கு எதிராக இலங்கை அணியின் டில்சன், சங்கக்கார ஜோடி 2 முறை சதம் எடுத்துள்ளது.

அத்துடன், சர்வதேச ஒருநாள் போட்டியில், 4ஆவது விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்களைச் சேர்த்த ஜோடிகள் பட்டியலில் யுவராஜ்-டோனி 256 ஓட்டங்களுடன் 2 ஆம் இடத்தைப் பிடித்துள்ளனர். முதலிடத்தில், அசாருதீன்-ஜடேஜா 275 ஓட்டங்களுடன் (1998 ஆம் ஆண்டில் ஸிம்பாப்வேக்கு எதிராக) உள்ளனர்.

யுவராஜ்-டோனி ஜோடி 10ஆவது முறையாக 100 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்துள்ளது.



'எழுக தமிழ்' நிகழ்வை நடத்தும் தமிழ் மக்கள் பேரவை அமைப்பின் பிரதிநிதிகள் அதன் இணைத் தலைவர்களுள் ஒருவரான ரி.வசந்தராஜா தலைமையில் கடந்த புதனன்று மட்டக்களப்பு ஆயர், வண.பொன்னையா ஜோசப்பையும் பங்குத்தந்தைகளையும் சந்தித்து, 'எழுக தமிழ்' நிகழ்வு குறித்து விளக்கமளித்து ஆசிபெற்றனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.

# நாளை விசேட கலந்துரையாடல் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த

## துறைசார் அதிகாரிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி சரத் அமுனுகம கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலுக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் டெங்கு நோய் பரவும் இடங்களுக்கு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி சரத் அமுனுகம நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானித்து வருகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(ம)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த உடன் களத்தில் இறங்குங்கள்!

## பணிப்பாளர் கடுமையான பணிப்புரை

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து ள்ள நிலையில் உடனடியாக விசேட விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுங்கள் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க.நந்தகுமாரன் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் கடுமையான பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு சகல அரச,தனியார்நிறுவனங்களின் ஆதரவையும் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் அவர் கோரியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்திற்கு அடுத்ததாக யாழ்.மாவட்டத்திலேயே டெங்கு நோய் வேகமாகப் பரவி வருகின்றது. குறிப்பாக, உடுவில், யாழ்.மாநகர சபை பிரதேசங்களில் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டிருக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில், நேற்று வரை 400 பேர் வரையானோர் டெங்கு நோய்த் தொற்றுக்களுடன் இனங் காணப்பட்டுள்ளனர். தற்போது மழை பெய்யத் தொடங்கியதால் இந்த நோய் மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உடனடியாக டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரிகள் தமது பிரிவில் சேவையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதர்களின் தலைமையில் பிரதேச சபைகள், பிரதேசத்திலுள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உதவிகளையும் பெற்று இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்தச் செயற்பாட்டுக்கு சுற்றுச்சூழல் பொலிஸாரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# தேங்காய், தேங்காய் மட்டைகளை ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிடம் தாம் விடுத்த கோரிக்கையை அடுத்து வட. மாகணத்திலிருந்து தேங்காய் மற்றும் தேங்காய் மட்டைஆகியவற்றை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஏற்றுமதி செய்வதற்கான தேங்காய்களையும், தேங்காய் மட்டைகளையும் மாதாந்தம் பெருமளவில் வழங்கக்கூடிய மொத்தவர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் யாழ். வணிகர் கழகத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளும்படி வணிகர் கழகம் கேட்டுள்ளது. உள்ளூர் உற்பத்திகளின் சந்தை வாய்ப்புக்களை உருவாக்கும் முயற்சியில் யாழ். வணிகர் கழகம் தொடர்ந்தும் ஈடுபட்டுவரும் என்பதால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் இவ்வாறான வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள முன்வரவேண்டும் என யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. மேலதிக தொடர்புகளுக்கு 021 222 8593 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் கழகம் அறிவித்துள்ளது.

## மதசார்பற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்றறிந்த சமூகத்தில் இந்த அறிவிப்பை அவர் விடுத்திருக்கின்றார் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம், இந்தியத் துணைத் தூதரகம், யாழ். மறை மாவட்ட கத்தோலிக்கத் திருச்சபை ஆகியன இணைந்து நடத்திய 'அன்னை தெரேஸா – இன்று கல்கத்தாவின் புனிதர்' என்னும் தொனிப்பொருளில் நினைவு கூரல் மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு நேற்று மாலை 4 மணிக்கு , யாழ். பிரதான வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில் அமைந்துள்ள 'பாதுகாவலன்' மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றிய போதே சம்பந்தன் மதச் சார்பற்ற நாடு பற்றி பிரஸ்தாபித்தார்.

பேராசிரியர் கலாநிதி ரட்ண ஜீவன் ஹூல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதிகளாக யாழ். ஆயர் வண.ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜன், இலங்கைத் திருச்சபை யாழ். குரு முதல்வர் சாமுவேல் பொன்னையா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

அன்னை தெரேஸாவின் சுயசரிதைப் புத்தகத்தை அன்னையின் சார்பில் எழுதியவரும், இந்தியாவின் முன்னாள் அரசுச் செயலாளரும், முன்னாள் தலைமைச் செயலாளருமான நவீன் பி சால்வாவும் இந்நிகழ்வில் உரையாற்றினார்.

'சேவையிலும், அரசியலிலும் மத சார்பின்மை' என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய சம்பந்தன், அன்னை தெரேஸாவின் மனிதாபிமானப் பணிகளையும் சேவைகளையும் விதந்துரைத்தார்.

ஐரோப்பியாவில் பிறந்த றோமன் கத்தோலிக்கரான அன்னை தெரேஸா, தமது பிறந்த நாட்டுக்கு அப்பால், இந்தியாவில், தமது மதம் அல்லாத பிற மத மக்கள் அதிகம் வாழும் சமூகத்தில் அளப்பரும் சேவை ஆற்றியமையை அவர் சுட்டிக் காட்டினார்.

மிக மிக வறுமைப்பட்ட மக்களுக்காக மதங்களுக்கு அப்பால் நின்று அவர் மகத்தான சேவையாற்றியமையால் சமாதானத்துக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது என்றுரைத்த சம்பந்தன், அந்த அன்னை புனிதராக திருநிலைப் படுத்தப்பட்டமையையும்நினைவு கூர்ந்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாங்கள் எல்லோரும் மதச்சார்பின்மை மீது நம்பிக்கை வைத்துள்ளோம்.

மதமும் அரசும் ஒன்றில் ஒன்று தங்கியிராமல் சுயாதீனமாக இருக்க வேண்டும். அரசு, மதத்தில் தங்கியிருக்க முடியாது. அதே போல் மதம் அரசில் தங்கியிருக்கக் கூடாது.

மதச் சார்பற்ற ஒரு நாட்டில் ஒவ்வொரு பிரஜைக்கும் தனது நம்பிக்கையின் அடிப்படையில் தனது மதத்தை பின்பற்றுவதற்கும் அதைப்பேணித்தொடர்வதற்கும் முழு உரிமையுண்டு. அந்த மதத்தை பிரசாரப்படுத்தவும், மேம்படுத்தவும் உரிமையுண்டு. அதை அப்படிச் செயற்படுத்துவதற்கு அவனுக்கு முழு உரிமையுண்டு. அதில் அரசு எந்த வகையிலும் தலையிட முடியாது. அப்படித் தலையிடுவதற்கான எந்த உரிமையும் அரசுக்குக் கிடையாது.

அரசு திணிக்கக்கூடிய எந்த மதத்தையோ, நம்பிக்கையையோ பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏதும் அவனுக்கும் கிடையாது. மதசார்பற்ற நாட்டில் அப்படித் திணிக்க முடியாது.

மதசார்பின்மையின் முக்கிய பண்பியல்பு இதுதான். மக்கள் தமது மனதுக்குச் சரி எனக் கருதும் – தமது நம்பிக்கைக்கு நியாயமாகத் தோன்றும் – மதத்தைத் தெரிவு செய்யவும், அதனைப் பின்பற்றவும், பேணவும், கைக் கொள்ளவும், பிரசாரப்படுத்தி முன்னெடுக்கவும் முழு உரித்தும், சுதந்திரமும் அவர்களுக்கு உண்டு. அதில் அரசு எந்த வகையிலும் தலையிடமுடியாது.

இந்தியா ஒரு மதச் சார்பில்லாத நாடு. இந்திய அரசமைப்பின் முன்னுரை இந்தியா ஒரு சோசலிஷ, மதச் சார்பற்ற, ஜன நாயக நாடு என்று தெளிவாகக் கூறுகின்றது.

அமெரிக்கா ஒரு மதசார்பற்ற நாடு. அந்த நாட்டு மக்கள் தங்களின் முழு நம்பிக்கைக்கும் விருப்பத்துக்கும் ஏற்ற மதத்தை – அந்த நாட்டு அரசு எதையும் திணிக்காத அல்லது விதிக்காத வகையில் – பின்பற்றுகின்றார்கள். அது அவர்களின் அடிப்படை உரிமை.

மத சார்பற்ற நாட்டில் முக்கிய பண்பியல்புகள், அம்சங்கள் எவை?

மதவாத நாடுகள் இருந்திருக்கின்றன. அங்கு மதவாதம் இருக்கும். ஐரோப்பியாவில் வேறுபட்ட காலங்களில் மதவாத நாடுகள் இருந்திருக்கின்றன. அங்கு மதவாதம் இருந்தது. அவை கிறிஸ்தவத்தில் தங்கியிருந்தன. அங்கு அரசுக்கும் மதத்துக்கும் இடையில் வேறுபாடுகள் இருந்திருக்கவில்லை.

ஆனால், இது (இந்தமுறைமை) எப்போதுமே திருப்தி தருவதாக அமைந்திருக்கவில்லை. தாங்கள் அரசுக்குக்கடப்பாடுடையவர்களா அல்லது மதத்துக்குக் கட்டுப்பாடுடையவர்களா என்று மக்களுக்கே விளங்க முடியாதிருந்தது.

ஆகவேதான் மதவாத நாட்டில் வாழ்வதை விட மதச்சார்பின்மை மிக மேலானதாக, மிக மேம்பாடுடையதாக, மிகவும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக உணரப்பட்டது.

மற்றொரு தெரிவு மதமேயற்ற நாடு. சில நாடுகள் இத்தகைய மதமற்றபண்பியல்பைக்கொண்டமைந்தன. சோவியத் யூனியன் சில காலங்கள் அத்தகைய மத மற்ற பண்பியல்பைக் கொண்டிருந்தது. அதன் அர்த்தம் நீங்கள் அங்கு எந்த மதத்தையும் அனுஷ்டிக்க முடியாது. மதத்தை எந்த வேளையும் நீங்கள் பின்பற்றவே முடியாது. நீங்கள் க ட வுள் இருப்பதையே நம்ப முடியாது.

மதச்சார்பின்மையில், மதச்சார்பற்ற நாட்டில் மக்கள் கடவுளை நம்புகின்றார்கள். மேலான சக்தி ஒன்று இருப்பதை மக்கள் நம்புகின்றார்கள். தங்கள் இலக்கை நோக்கி அந்த மேலான சக்தியே தங்களை வழி நடத்துகின்றது என்றும், அந்த மேலான சக்திக்குத் தாங்கள் கட்டுப்பட்டவர்கள் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

தங்கள் வாழ்க்கை முழுவதும் அந்த மேலான சக்தியின் வழி காட்டுதலில்தான் வெற்றியை எட்டுகின்றார்கள் என்பதே அவர்கள் நம்பிக்கை.

மதமேயற்ற நாட்டில் அப்படி நம்பிச்செயற்படுவதற்கோ, வாழ்வதற்கோ வாய்ப்பில்லை.

சில காலங்கள் சீனாவின் சில பகுதிகள் இவ்வாறு மதமேயற்றவையாக இருந்தன. அதற்கு அவர்களின் அரசியல் சித்தாந்த நம்பிக்கை கூட காரணமாக இருந்திருக்கலாம். அவர்கள் கம்யூனியம் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இலங்கையில் நாம் ஒரு கலப்பு நிலையைக் காண்கின்றோம்.

1948 இல் நாம் சுதந்திரமடைந்த போது சோல்பரி அரசமைப்பு இருந்தது. அந்த அரசமைப்பின் 29 ஆவது உறுப்புரை அரசின் சட்டமாக்கல் தத்துவம் குறித்தும் பேசுகின்றது. எந்த அரசும் ஓரினத்துக்கு அல்லது ஒருமதத்துக்குத்தனித்துநன்மை தரும் சட்டம் எதனை யும் ஆக்க முடியாது என்று அது தெரிவித்ததன் மூலம் மற்றெல்லோருக்கும் அது நன்மையளித்தது.

அதுபோல, எந்த அரசும் ஓரினத்துக்கு அல்லது மதத்துக்கு பாதிப்பு அல்லது சாதகமின்மையை ஏற்படுத்தும் எந்தச் சட்டத்தையும் ஆக்கமுடியாது என்று தெரிவித்ததன் மூலம் மற்றெல்லோர் மீதும் அது அக்கட்டுப்பாட்டை விதித்தது.

அதுவே, 1947 அரசமைப்பின் மூலம் அரசின் சட்டவாக்க அதிகாரம் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடாக – தடையாக அமைந்தது.

1972 இல் அந்த அரசமைப்பு மாற்றப்பட்டது. அது, இலங்கையில் பௌத்தத்துக்கு மேன்மையான இடமளிக்கப்பட வேண்டும் என்பதோடு பௌத்தத்தைப் பேணி, வளர்ப்பது அரசின் கடமை என்றும் தெரிவித்தது.

1972 அரசமைப்பு 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பால் மாற்றப்பட்டது. அதுவும் முன்னையதைப்போன்றே இலங்கையில் பௌத்தத்துக்கு மேன்மையான இடமளிக்கப்படுவதோடு பௌத்த சாசனத்தைப்பேணி, பாதுகாத்து, வளர்ப்பது அரசின் கடமை என்று வலியுறுத்தியது.

இப்போது நாங்கள் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் செயன்முறையில் உள்ளோம். பௌத்தத்துக்கு மேன்மையான, முக்கியமான இடமளிக்கின்றமை தொடரவேண்டும் என்ற உரிமைக் கோரிக்கை பரந்தளவில் வெளிப்படுவதை நாம் கேட்கின்றோம். புதிய அரசமைப்பு இதுவிடயத்தில் என்ன சொல்லப்போகின்றது என்பது எனக்குத் தெரியாது.

அரசமைப்பில் ஒரு மதத்துக்கு மேன்மையான, முக்கியமான இடமளிப்பதான ஷரத்தை முன்னிறுத்திக் கொண்டு, அதேசமயம், எல்லா மதங்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்றும், பாரபட்சம் காட்டபடக்கூடாது என்றும் கூறுவதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

எல்லா மக்களும் தங்கள் விருப்பத்துக்குரிய மதத்தைப் பின்பற்றுவதற்கான அடிப்படை உரிமை இருப்பதாகக் கூறிக் கொண்டே தனி ஒரு மதத்துக்கு மேன்மையான, முக்கியமான இடத்தை வழங்கும் 1972, 1978 அரசமைப்புகளின் மேற்படி ஷரத்து நாகரிக உலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மத சார்பின்மை என்ற கொள்கை நிலைப்பாட்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிட்டதாகவே நான் கருதுகின்றேன்.

எங்கள் நாடு ஒரு மதசார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம். இங்கு ஒவ்வொரு பிரஜையும் தன்னுடைய மதத்தைத் தெரிவுசெய்வதிலும், தனக்குரிய நம்பிக்கையை கனகச்சிதமாகத் தேர்ந்தெடுத்துப் பின்பற்றி கைக் கொள்வதிலும், தனக்கு முழு சுதந்திரமும் உரிமையும் இருப்பதாகவும், எந்த வகையிலும் பாகுபாடு காட்டப்படாமல், சமத்துவமாக நடத்தப்படுகின்றார் எவையும் உணரும்நிலைமை இருக்கவேண்டும் என நாம் விருப்புகின்றோம். – என்றார். (உ)

காலைக்கதிர்
Kalaikkathir

# ஒன்றிணைந்து பயணிக்க அமைச்சர் பைசர் அழைப்பு

## முதல்வரைச் சந்தித்த பின் பேட்டி

முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற யுத்தத்தால் பிரிந்திருந்த வடக்கு மற்றும் தெற்கு மக்கள் தற்போதைய சூழ்நிலையில் ஒன்றிணைந்து முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்று வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை முதலமைச்சர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலளார் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் பைசர் முஸ்தபா இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை அனைத்து மாகாண முதலமைச்சர்களும் உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகளுடன் சந்தித்துக் கலந்துரையாடி பிரச்சினைகளை அறிந்து கொண்டு அதற்குத் தீர்வுகாண்பது எனத் தீர்மானித்துள்ளோம்.

வள ஒதுக்கீடு உள்ளிட்ட பிரச்சினைகளை வடமாகாண முதலமைச்சர் தெளிவுபடுத்தினார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசின் கீழ் எங்களுக்கிடையில் சகோதரத்துவம் வளர்ச்சியடைந்துள்ளது. எங்களுக்குள் ஓர் இணக்கப்பாடு காணப்படுகின்றது. இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நாம் முடிவு செய்துள்ளோம்.

சி.வி.விக்னேஸ்வரன்போன்ற ஒருவர் ஒரு மாகாணத்தின் நிர்வாகத்தைப் பொறுப் பேற்றிருப்பது அந்த மாகாண மக்களுக்கு மட்டுமல்ல, முழு நாட்டுக்கும் பலமாக அமைந்துள்ளது. தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்பதை மறந்து அனைவரும் இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில் நாம் முன்னேறிச் செல்ல வேண்டும்.

கடந்த 30 வருடங்களாக நாங்கள் பிரிந்திருந்தோம். வட பகுதி மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. எனினும் தற்போது வடக்கு, தெற்கு என நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். – என்றார். ஒ

# மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம், வவுனியா பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில் தூதுவனை, இரும்பு மதவடி, சக்கனாவத்தை. டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை ஆகிய இடங்களிலும் மின்தடை ஏற்படும்.

வவுனியாவில் கிறிட் உப மின் நிலையத்தில் செயற்படுத்த வேண்டிய திடீர் திருத்த வேலை காரணமாக இன்று அங்கு பல்வேறு இடங்களில் வெவ்வேறு நேரங்களில் மின்தடை ஏற்படும் என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்த விவரம் நேற்றைய 'காலைக்கதிரில்' விரிவாக பிரசுரமாகியிருந்தது.

அதேபோன்று மன்னாரிலும் பல இடங்களில் மின்தடை ஏற்படும் என்ற விவரம் வெளியாகி இருந்தது.

இதேவேளை நாளை ஞாயிற்றுக்கிழமை வழமை போன்று காலை 8 மணி முதல் மாலை 6.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் புறாப்பொறுக்கி, அண்ணாசிலையடி, மண்டான், அச்சுவேலி வைத்தியசலைப் பிரதேசம், இராமலிங்கம் வீதி, ஜி.பி.எஸ் வீதி, பாற்பண்ணை, திருநெல்வேலி சந்தை, முடமாவடி, பூங்கனிச்சோலை, கலாசாலை வீதி, ஆடியபாதம் வீதி, அரசடி அம்மன் வீதி, டாக்டர் சுப்பிர மணியம் வீதி, கந்தரோடை, மாவிட்டபுரம், கீரிமலை, கொல்லங்கலட்டி, மாவைக்கலட்டி, நகுலேஸ்வரம், கீரிமலை கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குருமன்காட்டிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (இ

# விசேட அதிரடிப்படை வாகனம் மோதி மாங்குளத்தில் பாதிரியார் படுகாயம்



மாங்குளம், ஜன.21

மாங்குளத்தில் விசேட அதிரடிப் படையினரின் வாகனம் மோதியதில் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஒட்டுசுட்டான் 17 ஆம் கட்டையைச் சேர்ந்த யாகோ (வயது – 60) என்பவரே படுகாயமடைந்தவராவார். அவர் மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த அவர் மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குத் திரும்ப முற்பட்டார்.

அப்போது விசேட அதிரடிப் படையினரின் வாகனம் ஒன்று அவரது மோட்டார் சைக்கிளை மோதியதுடன் ஐந்து மீற்றர் தூரம் வரை இழுத்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இந்த விபத்துத் தொடர்பாக மாங்குளம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம–21)



## ரூ.1,000 கள்ள நோட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் போலி நாணயத்தாள் ஆயிரம் ரூபாவை மாற்ற முற் பட்ட இளைஞர் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் விசாரணை செய்யப்பட்டதில் இரகசிய இடம் தொடர்பில் தகவல் கிடைக்கப் பெற்றது.

இதனையடுத்து நெல்லியடி சப் இன்ஸ்பெக்டர் கே.விமலவீர தலைமையில் எஸ்.ஜெகதீஸ்வரன், ஜே.டென் சிராஜ், ஏ.அஜித் பெரெரா ஆகியோர்கள் அடங்கலாக குழுகளத்தில் இறங்கியது.மேற்படிகுழுவின்வன்னிச்சை அம்மன் கோயிலடியில் உள்ள வீடு ஒன்றினைச் சுற்றிவளைத்தனர். அங்கிருந்த 17,18,21,25 வயதுடைய நபர்கள் கைது செய்யப்பட்டனர். முன்னர் கைது செய்யப்பட்ட நபர் பழைய தேவாலய வீதி, இலக்கணாவத்தையைச் சேர்ந்த 26 வயதுடைய நபர் எனப் பொலிஸார் கூறினார்.

அவ்வீட்டில் இருந்து போலி நாணயத்தாள்களை அச்சிடப் பயன்படுத்தப்பட்ட கணனி, பிரதியாக்கல் இயந்திரம், போலி நாணயத்தாள்களின் துண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டன.

போலி நாணயத்தாள் அச்சிடுதலுடன் தொடர்புடைய பிரதான நபர் வெளியில் இருக்கிறார் எனவும் பெரும்பாலும் அவரைத் தாங்கள் இன்று சனிக்கிழமை கைது செய்வோம் எனவும் பொலிஸார் கூறினர். (ம – 40)

## இறக்குமதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களை அசௌகரியத்துக்குள்ளாக்க முடியாது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்கப்படாது என்றும் கூறினார்.

சுற்று நிருபங்களுக்குள் மட்டுப்படாது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது அதிகாரிகளின் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி நிலைக்கு மத்தியில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள விசேடஜனாதிபதிசெயலணியை நேற்றுபிற்பகல்ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரிசி இறக்குமதியின்போது பாவனைக்கு பொருத்தமான அரிசி இறக்குமதி செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அரசுக்குசொந்தமானகளஞ்சிய சாலைகளில் இருந்து வழங்கப் பட்டுள்ள நெல்லை பெற்றுக் கொண்டுள்ள நெல் ஆலை உரிமையாளர்கள் அவற்றை அரிசியாக மாற்றி சந்தைக்கு வழங்கியுள்ளார்களா என்பதை கண்டறிந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

தமது தனிப்பட்ட வேண்டுகோளின் பேரில் இலங்கைக்கு பத்தாயிரம்மெற்றிக்தொன் அரிசியைஇன்னும்சிலவாரங்களில் அன்பளிப்பாக வழங்க இந்தோனேசிய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்குத் தேவையான பௌசர்கள், நீர் பம்பிகள் மற்றும் நீர்த் தாங்கிகளை உடனடியாக அந்தந்த மாவட்டங்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறும் அவர் கூறினார்.

வரட்சி நிலையுடன் ஏற்பட்டுள்ள சுகாதார பிரச்சினைகள் குறித்துகவனம்செலுத்திவிசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சுக்கு ஆலோ சனை வழங்கிய ஜனாதிபதி, மின்சாரத்தையும் நீரையும் சிக்கனமாகப் பாவிப்பது தொடர்பாக மக்களுக்குஅறிவூட்டுவதற்காக விசேட நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்குமாறு ஊடகத்துறை அமைச்சுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஐக்கியநாடுகள்சபை, உலக வங்கி மற்றும் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகளும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டமையுடன் ஏற்படக் கூடிய நிலைமைகளுக்கு முகம் கொடுப்பதற்கு இலங்கைக்குத் தேவையான பொருள் மற்றும் நிதி உதவிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்கள் எனத் தெரிவித்தனர். (ம)

## ஏறுதழுவல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநில அரசுக்கு எதிராகவும் இந்திய நீதி மன்ற ஆணைக்கு எதிராகவும் உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் உணர்வுடன் அறவழிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந் நிலையில் தமிழக தொப்புள் கொடி உறவுகளின் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஈழத்தமிழர்களாகிய நாம் உணர்வுளால் ஒன்றிணைந்து உணவுதவிர்ப்பு போராட்டத்தில் ஒன்றிணைவோம் என்று மேற்படி பேரவையின் செயலாளர் மு.உதயசிறி தெரிவித்துள்ளார். (ம–07)

## மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இதயங்களின் காயங்களை ஆற்றுவது தொடர்பில் இலங்கை அரசு அவதானம் செலுத்தியிருப்பது முக்கியமான விடயம் என்றும் நாட்டு மக்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கும், உறுதிப் படுத்தும் வேலைத்திட்டங்களை நிலையானதாக முன்னெடுத்துச் செல்வது ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள்பேரவையின் எதிர்பார்ப்பாகும் எனவும் மனித உரிமைகள் ஆணையாளர் கூறியுள்ளார்.

அனைத்து மக்களது உரிமைகளையும் அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இச் சந்திப்பில் தெரிவித்துள்ளார். ஒ

## நுகேகொடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நுகேகொடைக் கூட்டம் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள் விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

நுகேகொடை ஒரு வெற்றிப் பிரதேசமாகும். இதனால் எமது அரச எதிர்ப்பு நடவடிக்கையை அங்கிருந்து ஆரம்பிக்கின்றோம். இக் கூட்டம் அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கையின் முதலாவது எத்தனம் என நான் கூறமாட்டேன்.

கூட்டு எதிரணியின் அரச எதிர்ப்புச் செயற்பாடுகளைக் குழப்புவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது என அவர் மேலும் குற்றம்சாட்டினார். ஒ

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போரினால் கணவனை இழந்த பெண்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்து வதற்குப் பல்வேறு செயற்றிட் டங்களை வகுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. வாழ்வாதார உதவிகளைச் செய்து அவர்களை மீண்டும் சமூகத்துடன் இணைக்க வேண்டியுள்ளமை பற்றி நான் அவர்களிடம் எடுத்துரைத்தேன்.

கடந்த காலங்களில் இவ்வாறு பல உதவித் திட்டங்களை வழங்கி வந்தோம். மீண்டும் இவ்வாறான உதவிகளை வழங்குவோம் என அவர்கள் உறுதியளித்தனர்.

புனர்வாழ்வின்போது எந்த விதமான பயிற்சிகளையும் முன்னாள் போராளிகளுக்கு வழங்கவில்லை. மீளவும் தமது வாழ்க்கையைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் எதுவும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படவில்லை. மாவட்டத்தில் ஏதாவது குற்றங்கள் நடந்தால் பொலிஸாரும் இராணுவத்தினரும் முன்னாள் போராளிகளையே கைது செய்கின்றனர். இவ்வாறான கைதுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். முன்னாள் போராளிகளுக்கு அங்கீகாரம் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என நான் அவர்களுக்கு விளக்கமளித்தேன்.

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்குஎன்னநடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமென அவர்கள் என்னிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற வேண்டும். நடந்ததவறுகளுக்கு நீதி கிடைத்தால் மாத்திரமே சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் உருவாக்க முடியும். அரசியல் ரீதியான உரித்துக்களைப் பெற்றுத் தந்தால் மாத்திரமே ஏனைய விடயங்களில் கரிசனை கொள்ள முடியும். அரசியல் ரீதியான உரித்துக்களை வழங்குவதற்குத் தென் பகுதியினர் தடையாக உள்ளனர்.

அதிகாரப் பகிர்வு நாட்டுக்கு எவ்வாறு நன்மையளிக்கும் என்பது பற்றி பல்கலைக்கழகங்களிலும், நாடாளுமன்ற உறுப்பிணர்கள்மற்றும்மாகாண சபை உறுப்பினர்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்களை மேற்கொண்டால் வடமாகாண மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென எடுத்துக்கூறினேன். – என்றார்ஓ

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.